
டாக்டர்

முத்துலட்சுமியின்

26



# நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# டாக்டர் முத்துலட்சுமியின் தம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

புலவர் என்.வி. கலைமணி எம். ஏ.,

சாந்தி நிலையம்
புதிய எண். 126, உஸ்மான் சாலை,
தி.நகர், சென்னை-600017.

விலை : ரூ. 20-00

☐ DOCTOR MUTHU LAKSHMIIN NAMMAI MEA'MPADUTHTHUM ENNANGAL ☐ By : N. V. Kalaimani ☐ First Edition : March 2001 ☐ Price : Rs. 20-00 ☐ Copy Right Holder & Publisher : SHANTHI NILAYAM New No. 126, Usman Road, T. Nagar, Chennai-600017. Phone : 4340205 P.P. ☐ Printed at : Kumer Printers, Chennai-600033 ☐

# பதிப்புரை

நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் என்ற தலைப்பின் கீழ் உலகப் பேரறிஞர்கள் பலரது கருத்துக்களையும், கண்டுபிடிப்பு களையும் தொகுத்து எங்கள் நிறுவனம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

அந்த நூலின் வரிசையில் டாக்டர் முத்துலட்சுமி அவர்கள் பெண் கல்விக்காக பாடுபட்டதையும், தேவதாசி முறையை ஒழிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், புற்று நோய் கொடுமையை ஒழிக்க அவர் ஆற்றிய நற்செயல்களையும் மிக அருமையாக தொகுத்து அளித்துள்ளார் புலவர் எஸ்.வி. கலைமணி அவர்கள். டாக்டர் முத்துலட்சுமியின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் என்ற இந்நூலை வெளியிடுவதில் நாங்கள் மிகவும் பெருமிதம் அடைகிறோம். அனைவரும் தவறாமல் படித்து பயன் பெற வேண்டுகிறோம்.

– பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


பக்கம்

1. பெண்ணுரிமை (ஆணிவேர்கள்) 5
2. பெண்கள் நாட்டின் கண்கள்! ஒளிகள்! 9
3. தாமரை இலையின் மீது தத்தளித்தக் கல்வி நீர்! 16
4. டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழ்ப் பெண்மணி 25
5. மங்கலம்: மனைமாட்சி நன்கலம் நன்மக்கட்பேறு! 33
6. பெண்கள் உரிமைக்காக பாரிஸ் மாநாட்டில் சபதம்! 43
7. சட்டசபையில் முதல் பெண் உறுப்பினர் 51
8. அம்மையார் நிறுவிய அவ்வை இல்லம் 61
9. முதன் முதல் புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் நிறுவியவர் 66
10. பெண்ணுரிமைக்காகப் போராடிய வீராங்கனை காலமானார்! 72

# டாக்டர் முத்துலட்சுமியின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

## 1. பெண்ணுரிமை ஆணி வேர்கள்

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்"!

என்று, மங்கையர் பெருமையை மகாகவி பாரதி பாடினார். அந்த பெண்ணுரிமை பேணும் பெருமானின் கனவு, தற்போது மத்திய-மாநில அரசுகளின் சட்ட வடிவச் செயல்களால் நனவாகி வருவதைப் பார்க்கின்றோம்!

சமுதாயக் கொடுமைகளால் பெண்ணினம் நசுக்கப்பட்டு, பாழடிக்கப்பட்டு வருவதைக் கண்ட அமரகவி பாரதி, தனது ஏக்கக் குரலைப் 'பாடலாகப் பாடுவதற்கு முன்னாலேயே, 'சகக மணம் அல்லது சதி' என்ற பழக்க வழக்கங்களைஎதிர்த்துப் போராடியவர் ராஜாராம் மோகன் ராய் என்பவர்.

'சகக மணம் அல்லது சாதி' என்றால் என்ன என்பதை நாம் முதலில் புரிந்து கொண்டால்தான், பெண்ணுரிமைக் காகப் போராடிய உரிமைப் போராளிகள் எப்படியெல்லாம் அரும்பாடுபட்டிருப்பார்கள் என்ற கஷ்ட நஷ்டங்களின் அருமைகளை உணர்ந்து பெருமையடைய முடியும்.

ஒரு பெண் தனது கணவன் இறந்து விட்டால் அந்தப் பெண்ணைப் பூவோடும் பொட்டோடும், கட்டிய மங்கல நாணோடும், மரணமடைந்தவனது உடல் எரியும் நெருப்பில்-பதைபதைக்க, கதறக்கதற, துடிதுடிக்கத் தள்ளி அவ்

லது, அவளாகவே விரும்பி உயிரோடு எரிக்கும் கொடூரமான செயலுக்குத்தான் சககமணம் அல்லது சதி என்று பொருள்.

இது போன்ற பெண்ணின உயிர்க் கொலைக்கு என்ன பெயர் தெரியுமா? உடன் கட்டை ஏறுதல்! நினைத்தாலே நெஞ்சு பொறுக்காத இந்தப் படுபாதகமான கோரம், மக்கள் கவிபாரதி பிறப்பதற்கு முன்பிருந்தே சமுதாயத்தில் நடந்து வந்த மிருகச் செயலாகும்.

கொடுமைக்கும் கொடுமையான இந்தப் பெண்ணின உயிர்க் கொலையை தடுத்து நிறுத்த அரும்பாடுபட்டவர். ராஜாராம் மோகன்ராய் இந்த மனிதநேய மகான் முயற்சிகளுக்கு 1828ம் ஆண்டில், அப்போதைய ஆங்கிலக் கவர்னர் ஜெனரலாக இருந்த ஜெனரல் வில்லியம் பென்டிங் பிரபு சட்ட வடிவம் கொடுத்து, உடன்கட்டை ஏறுதல் என்ற சமுதாயக் கொடூரத்தை அறவே ஒழித்தார்!

பால்ய விவாகத்தை தடுத்து நிறுத்தவும், விதவையான பெண்கள் மீண்டும் மறுமணம் செய்து கொள்ளவும் 1856-ம்ஆண்டில் அவற்றைச் சட்டமாக்கிட பெரிதும் பாடுபட்டு உழைத்வர்கள் ஈஸ்வர சந்திர வித்தியா சாகர், கேசவ சந்திர சென் என்ற இருவரும் ஆவர்!

அடுப்பு ஊதும் பெண்களுக்கு எதற்குக் கல்வி என்று கேட்ட பெண் கல்வி எதிரிகளுக்கு எதிராக, 1860-ம் ஆண்டில் வங்காளத்தைச் சேர்ந்த சசிபாத முகர்ஜி என்பவர்— பெண்களுக்கென்றே ஒரு தனி பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி, பெண்கள் கல்வி கற்றிட அவர் வழிகாட்டினார்!

பெண்கள் கடல்கடந்து பயணம் செய்வது கூடாது என்ற மூடநம்பிக்கைக் கொள்கையை முறியடித்தவரும் மேற்கண்ட அதே முகர்ஜிதான். 1871-ம் ஆண்டில் முகர்ஜி லண்டனுக்குச் சென்றபோது அவரது மனைவியைத் தன்

னுடன் அழைத்துக் கொண்டு பயணம் சென்று, அக்கால மூடநம்பிக்கையாளர்களுக்குப் பாடம் புகட்டினார்!

1872-ம் ஆண்டில் பிரம்ம சமாஜ் சட்டம் என்ற ஒரு சட்டம்; அமுலானது. அதாவது ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒருதாரம் மணம் நடப்பதும், கலப்பு மணம் செய்து கொள்பவர்களுக்கும் அச் சட்டம் மூலமாக சட்ட ஆதரவும் கிடைத்தது.

ஜெம் ஷெட்ஜி என்ற ஒரு சமுதாய முன்னேற்றச் சீர்திருத்தச் சிற்பி, பெண்களுக்கு ஆங்கிலக் கல்வி அவசியம் என்பதை வற்புறுத்தி அதற்கான பல கல்வி நிலையங் களை ஆங்காங்கே துவக்கிப் பெண் கல்வி ஆர்வத்துக்கு ஆணிவேராக விளங்கினார்!

கோஷா என்ற இஸ்லாமியப் பெண்களும், ரஜபுத்திர பெண்களும், ஜைன மதத்தைப் பின்பற்றிடும் மகளிரும், மார்வாடி மரபு மங்கையர்களும் பர்தா என்ற முக்காடு போட்டு; அவர்களது இயற்கையான அழகை மறைத்து வந்தார்கள்.

துருக்கி நாட்டில் இருந்த பர்தா பழக்கத்தின் மரபை; கமால் பாட்சா என்ற ஒரு சீர்திருத்தவாதி அகற்றியதைப் போல, இந்தியாவிலும் பக்ருதீன் தயாப்ஜி என்பவர் அந்த பர்தா அணியும் வழக்கத்தை அகற்றினார்.

மகரிஷி கார்வே என்ற ஒரு கல்விமேதை, பெண்களுக் கென்று தனியான ஒரு பல்கலைக் கழகத்தை 19.6-ம் ஆண் டில் ஏற்படுத்தி பெண், கல்வி கற்பது மட்டும் போதாது, அவர்கள் கல்வித் துறைகளில் பட்டதாரிகளாகவும் வர வேண்டும் என்று முதன்முதல் ஒரு பல்கலைக் கழகத்தை அவர் நிறுவிக் காட்டினார்.

பெண்கள் பூப்பெய்திய பிறகுதான், அவர்களுக்குத் திருமணமே செய்யவேண்டும் என்ற திட்டத்தை முதன்

முதல் சட்டமாக்கிய பெருந்தகையாளர் சீனிவாச சாஸ்திரி என்பவர்! ஆவார்.

அவரைப் போலவே, டி. மாதவராவ் என்பவர், பெண் களுக்குரிய திருமண வயது உயர்த்தப்பட வேண்டும் என்று ஆங்கிலேய அரசுக்கு கோரிக்கை வைத்து, சட்ட வடிவத்தை ஏற்படுத்தினார்.

வேரில் பழுத்த பலா போன்ற விதவைப் பெண்களுக்கு விதவை மணம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், விதவை மணம் ஆதரிப்புச் சங்கம், என்ற ஒரு சங்கத்தைத் திவான் பகதூர் ரகுநாத ராவ் என்பவர் சென்னையில் முதன் முதல் துவங்கி செயல்படுத்தினார். அந்த சங்கம் பல விதவைகளுக்கு மறுவாழ்வளித்தது.

வீரேசலிங்கம் பந்துலு என்ற ஓர் ஆந்திர மனிதாபி மானி, பெண்ணுரிமைகளுக்காகவும், பெண்கள் முன்னேற் றத்திற்காகவும், பெரிதும் சங்கங்களை உருவாக்கி, அவர் ஆந்திரத்திற்கு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் முன்னேற் றத்திற்காகவும் பாடுபட்டார்.

மைசூர் மகாராஜா தனது சமஸ்தானத்தில் ஒரு சட்டம் கொண்டு வந்தார். அதாவது, ஐம்பது வயதுக்கு மேற் பட்ட ஆண்கள் பதினான்கு வயதுக்குட்பட்ட பெண்களை திருமணம் செய்து கொள்ளக்கூடாது; அதே நேரத்தில் பத்து வயதுக்குட்பட்ட பெண்களுக்குத் திருமணம் செய்யக் கூடாது என்பதே அவர் கொண்டு வந்த சட்டமாகும்.

சாரதா என்ற ஒரு சட்டம். அது 1929-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. எல்லா சாதிகளுக்கும் உரிய அந்தப் பொதுச் சட்டத்தில், பெண்களுக்குத் திருமணம் செய்யும் வயது பதினான்கு என்று வரையறுக்கப்பட்டது

இவர்கள் மட்டுமல்ல; விவேகானந்தர், அன்னி பெசண்ட் அம்மையார், பிரம்ஜி நோவர்ஸ்கி, காந்தியடி

களார், ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர், தமிழ்த்தென்றல் திரு.வி.க., தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் தருமாம்பாள், கலைஞர் கருணாநிதி உட்பட பலரும், மங்கையர் இனம், பெண்கள் சமுதாயம் மேன்மை பெற தங்களது வாழ்நாள் முடிவுவரை அயராது அரும்பாடு பட்ட பெருமக்கள் ஆவார்கள் என்பதிலே இரண்டு கருத்துக்கு இங்கே இடமில்லை எனலாம். இருந்தும் தமிழகத்தில் இரு பெண்மணிகள் பெண்ணுரிமைப் போராட்டம் பணியாற்றியதில் கண்ணின் மணியெனக் குறிப்பிடத்தக்கப் பெருமை பெற்றவர்கள் ஆவர்.

யார் அந்த இரு பெரும் பெண்ணுலகச் சேவையாளர்கள் என்று கேட்பீர்கள்; அவர்களுள் ஒருவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார்; மற்றவர் மூவாலூர் பெரு மாட்டி இராமாமிர்தம் அம்மையார் ஆவார்!

இராமாமிர்தம் அம்மையார் பற்றி ஒரு தனி நூலே எழுதலாம்; ஆனால், நாம் இங்கே டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் அவர்கள் வாழ்வும், பெண்ணுரிமைக்காக அவர் செய்த சீர்திருத்தச் சேவைகளையும் மட்டுமே பார்ப்போம்!

## 2. பெண்கள் நாட்டின் கண்கள்!

மனிதப்பிறவி எடுத்தவர் எல்லாம் மக்கள் ஆகார்! அப்பிறவிகளுள்ளே செடிகளுண்டு, மரங்கள் உண்டு; கல்லுண்டு; மரமுண்டு; பாம்புண்டு; பறவைகளுண்டு; விலங்குகள் உண்டு! அவர்கள் அனைவரும் மக்களாக மாறிட முயற்சி செய்தல் வேண்டும்! முயற்சி உயர்ச்சி தரும் தரும், அல்லவா?

எனவே, உடல் ஒருவித விளக்கு; உயிர், அறியாமை என்ற பேரிருளில் மூழ்கிக் கிடப்பது; கொஞ்சம் கொஞ்ச

மாக, படிப்படியாக, ஞானாகவாக, அதன் இருளை அகற்றி அறிவை விளக்கம் செய்வது உடல்! அதனால், உடல் 'விளக்கு' என்று கூறப்பட்டது.

உயிர், பிறவிகள் தோறும் பல உடல்களில் ஒன்ற ஒன்ற, அதன் இடையே அறிவு விளக்கம் பெருகிப் பெருகி வளர்கிறது. அந்த வளர்ச்சிக்குத் துணைபுரியும் பண்பு இயற்கையிடம் இருக்கிறது.

உடல் மூலமாக உயிர் பெற்றுவரும் விளக்கம், அதாவது வளர்ச்சி, உள்ளது சிறத்தல் என்பதாகும். உள்ளது சிறத்தலைக் கூர்தல் அறம் Evoloution என்பார் தொல் காப்பிய பெருமானார். இந்த அறம்தான் உலகை வளர்த்து வருகிறது. உலக வளர்ச்சிக்கு என்று கூர்தல் அறம் இயற்கையில் அமைந்துள்ளது.

வாழ்க்கை என்பது ஒவ்வொருவர் இடத்திலும் ஒவ் வொரு விதமாக அமைகின்றது. அந்த வாழ்க்கை வர லாற்றை எழுதும்பேறு சிலருக்கே ஏற்படும்; ஏனென் றால், பலதிறப்பட்ட உலகத்தை ஒழுங்கு முறையில் நடத் தும் பொறுப்பு இயற்கையினுடையதாகும்

எவருடைய வாழ்க்கையில் அறிவு படிப்படியே வளர்ந்து எவ்வுயிரும் பொது என்ற அறிவு தோன்றி, தனது உயிரே பிற உயிர்கள் என்ற உணர்ச்சி பொங்குகின்றதோ, அந்த பொங்கிய உணர்வில் பிறருக்கும், உலகுக்கும், பிற உயிர்களுக்கும் தொண்டாற்றும் பண்பு அமைகின்றதோ, அந்த வாழ்க்கைதான் வெற்றி பெற்ற வாழ்க்கை என்று உலகம் புகழும்; போற்றும்! பொதுவாழ்க்கைக்கும் புகழுக் கும் இதுவே ஓர் அளவு கோலாகும்! ஆணிவேராகும்!

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான், பெண்கள் முன்னேற்றம், பெண்ணின வளர்ச்சி அறிவு, போன்ற புதுமைகள், மக்கள் இடையே பூக்க ஆரம்பித்தன அக்காலகட்டத்தில்தான் பெண்கள் நமது பண்பாட்டின்,

கண்கள் என்று புலவர்களாலும், கற்றவர்கள் ஒன்றிரண்டு பேர்களாலும் பேசப்பட்டன!

இந்தப் பேச்சு நாளடைவில் வளர்ந்து வளர்ந்து, பிறகு எங்கு பார்த்தாலும், அதாவது உலக நாடுகள் இடையேயும் பெண்ணின வளர்ச்சி, பெண்கள் முற் போக்குச் சிந்தனை, பெண்கள் கல்வி என்ற அளவுவரை வளர ஆரம்பித்தது.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, மாஜிஸ்திரேட்டாக இருந்தார். ஒருநாள் அவர் பாடல் ஒன்று எழுதும்போது, "மாதரை நினையாதே மனமே" என்று எழுதினார். இதைப்படித்த அவரது துணைவியார், 'என்னங்க இது! மாதரை நினையாதே என்று எழுதிவிட்டீர்கள்! அப்போது நீங்கள் என்னையும் கூட சேர்த்து நினைக்க மாட்டீர்களா? என்றார்.

அதற்கு வேதநாயகம் பதில் கூறும்போது நானெழுதிய பேப்பரைக் கொடு, என்று மனைவியிடம் உள்ள அந்தப் பேப்பரைப் பெற்று, 'மாதரை நினையாதே மனமே" என்று இருந்த அடியின் இறுதியிலே, 'பிற' என்ற சொல் லைச் சேர்த்து, 'இப்போது படி' என்று மனைவியிடம் கூறினார்.

'மாதரை நினையாதே மனமே—பிற
மாதரை நினையாதே"

என்று அவர் எழுதியதைக் கண்டு, பெண்களை மதிக்கும் கணவரின் பண்பைப் பாராட்டி மகிழ்ந்தார்! இவ்வாறு உள்ள ஒரு சிலரின் உயரிய பண்பு சிறிது சிறிதாக இயன்ற வரை வளர்ந்து இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலே பெண்ணுரிமை இயக்கங்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல. உலகெங்கும் இதுபோன்ற சிந்தனைச் சிதறல்களை வளர்த்தன.

"மங்கை யராகப் பிறப்பதற்கே—நல்ல
மா தவம் செய்திட வேண்டு மம்மா!

என்று, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பெண்களைப் பாராட்டிப் போற்றும் அளவுக்கு மங்கையர் மாண்பு உயர்ந்து கொண்டே வந்தது!

தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார் போன்ற மேதைகள் எல்லாம், 'பெண்ணின் பெருமை' என்ற நூல் எழுதி, பெண்ணின வளர்ச்சிக்காக அவர் பெருமைமிக்க தொண்டுகளைப் புரிந்ததை இந்த நூற்றாண்டிலே கண்டோம்.

இந்த நூற்றாண்டில் மட்டும் அல்ல; சங்ககாலப் புலவர்களுள், அஞ்சியாந்தையார், ஆதி மந்தையார், வெள்ளி வீதியார் ஔவை பெருமாட்டி, ஒக்கூர் மாசாத்தியார், கச்சிப்பேட்டு நன்னாகையார், காக்கைப் பாடினி நச்செள்ளையார்; காவற்பெண்டு, நப்பசலையார் போன்ற பெண்பாற் புலவர்கள் எல்லாம், அவரவர் அறிவின் செறிவால், பெண்ணுலகம் அறிவூறும் பெண்ணுலகம் என்பதை வாய்மணக்க, தமிழ்மணக்கப் பாடிக்காட்டி, தமிழ் உலகுக்கு அறிவு சேவை ஆற்றியிருப்பதை இன்றும் அவர்களது செய்யுட்கள் நமக்குச் செப்புகின்றன.

ஒரு நாடு தனது அடிமைத்தளையிலே இருந்து விடுபட, சுதந்திரப் போராட்டம் செய்யும்போது, ஏகாதிபத்திய வாதிகள் ஏவிவிடும் அடக்குமுறைக் கொடுமைகளுக்கு அஞ்சாமல் எழுச்சி உணர்ச்சி பெற்று எப்படி புரட்சியிலே ஈடுபடுகின்றதோ, அதனைப்போல, பெண்ணுரிமைக்கான தன்மானத்தைக் காப்பாற்றிட பெண்ணினம் எழுச்சி பெறும் உணர்ச்சி இன்று எங்கு பார்த்தாலும், உலகம் முழுவதுமாகப் பெண்ணின உரிமைப் போர் நடந்து கொண்டிருப்பதை நாமும் பார்க்கின்றோம்.

அவ்வாறு, பெண்ணினப் போர் எழுச்சியிலே தன்னலம் பாராமல் போராடியவர்களில் குறிப்பிடத்தக்கப் பெருமை

பெற்றவர்களிலே ஒருவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி யாவார்! அக்காலப் பெண்ணுரிமை நிலை அவ்வாறு வீட்டின் தீபம் போல் சிறிது சிறிதாக ஒளியூட்டி வந்தது.

டாக்டர் முத்துலட்சுமி, தொண்டைமான் என்ற பரம்பரையின் ஆட்சி நடைபெற்ற புதுக்கோட்டை சமஸ்தானத்திலே, 1886-ம் ஆண்டில் பிறந்தார்.

முத்துலட்சுமியின் தந்தை பெயர் நாராயணசாமி! தாயார் பெயர் சந்திரம்மாள்! புதுக்கோட்டை அரசினர் கல்லூரியில் அவரது தந்தையார் முதல்வராகவும் அந்த சமஸ்தானத்தின் கல்வித்துறை டைரக்டராகவும், மன்னன் தொண்டைமானது அரசியல் ஆலோசகராகவும் இருந்து அரும்பணியாற்றி, நல்ல மதிப்பும் மரியாதையும் பெற்ற கௌரவமிக்க மனிதராக இருந்தவர். அவர் பி.ஏ. பட்டம் பெற்ற பட்டதாரி!

இசைக் கலையிலும் நாராயணசாமி வித்தகராக விளங்கியிருந்ததால், புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு வருகைதரும் இசைவிற்பன்னர்கள் அனைவரும், இவரிடம் பரிந்துரை பெற்ற பிறகே மன்னர் அவைக்குச் சென்று பரிசுகள் பெறுவார்கள்.

அவரது மனைவி சந்திரம்மாள், "பெண்ணின் பெருந் தக்கயாவுள?" என்ற வள்ளுவர் பெருமானின் பெண்ணின் பெருமைக்கு ஏற்றவாறு சகல பண்பாடுகளிலும் சிறந்து விளங்கி, கணவனுக்கேற்றவாறு நடந்துவரும் மனைதக்க மாண்புடையவராக விளங்கியவராவார்.

நாராயணசாமி, சந்திரம்மாள் திருமணம் நடந்த பின் இந்த தம்பதிகளுக்கு எட்டு குழந்தைகள் பிறந்தன. இவர்களில் முதல் குழந்தையாக 1886-ம் ஆண்டு பிறந்தவர் முத்துலட்சுமி!

இவ்வாறு அடுத்தடுத்து எட்டுக் குழந்தைகள் பிறந்ததில் நான்கு குழந்தைகள் இளம் வயதிலேயே நோய்

நொடிகளுக்குப் பலியாக இறந்து விட்டன. மீதியுள்ள நான்கு குழந்தைகளின் பெயர் முத்துலட்சுமி, சந்திரம்மாள் நல்லமுத்து, ராமையா என்பவர்களாகும்.

இவர்களுள், முத்துலட்சுமி, சந்திரம்மாள், நல்லமுத்து என்ற மூவரும் பெண்களாவார்; ராமையா என்பவர் ஆண் குழந்தை. இவர், முத்துலட்சுமிக்கு அடுத்துப் பிறந்த ஆண் குழந்தை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவருக்கு பிறகு பிறந்தவர்களே சந்திரம்மாள், நல்லமுத்து என்ற பெண் குழந்தைகள்!

இராமையா, கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றவராக வும், தகப்பனாரைப் போல இவரும் சமூகத் தொண்டராக வும் விளங்கி, வழக்குரைஞர் பணிச் சட்டப் படிப்புப் படித்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகவும் பணியாற்றியவராவார்.

சந்திரம்மாள் வடமொழியில் புலமை பெற்றிருந்தார். தமிழ்மொழியில் மேடைப்பேச்சாளராகவும், தனது தந்தையைப் போல இசைஞான வித்தகராகவும் விளங்கிய இந்த அருங்குணச் செல்வி மணமான பின்பு நடுத்தர வயதிலேயே புற்று நோய் என்ற கொடிய நோயிற்குப் பலியாகிவிட்டார்.

கடைசியாகப் பிறந்த நல்லமுத்து என்பவர், கற்க வேண்டிய கல்விகளைக் கசடறக் கற்ற பின்பு, ஆங்கிலத் திலே அற்புத நாவன்மை பெற்று தனது தந்தையார் புதுக்கோட்டை அரசினர் கல்லூரி முதல்வராகப் பணி யாற்றியதைப்போல, இவரும் சென்னையிலே தற்போதும் உள்ள ராணி மேரி கல்லூரியில் முதல்வராகப் பொறுப் பேற்று பணிபுரிந்தார்.

நல்லமுத்து அக்கல்லூரியில் முதல்வராவதற்கு முன்பு, ஆங்கிலேயர்களே அதுவரை முதல்வராகப் பணியாற்றி வந்தார்கள். நல்லமுத்து என்ற மாதரசிதான் தமிழ்பேசும்

பெண்ணாகவும், ஓர் இந்து இனத்தைச் சேர்ந்தவராகவும் முதன்முதல் முதல்வராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்தவர் ஆவார்! அது மட்டுமல்ல; முதல் உலகப் போருக்குப் பிறகு, அமைதிப் பணியாற்ற சர்வதேச சங்கத்தில் நியமிக்கப்பட்ட முதல் இந்தியப் பெண் அவர் என்பது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

ஆங்கிலப் பேச்சுப் புலமையிலும், எழுத்துப் பணியிலே தேர்ச்சி பெற்ற எழுத்தாளராகவும் விளங்கிய இந்த நல்லமுத்து அம்மையார், இந்திய நாடாளுமன்ற உறுப்பினராய் பதவி வகித்து, அரிய பல பணிகளை ஆற்றியவர் என்ற புகழையும், மதிப்பையும் பெற்றார்?

இந்த அம்மையாரது ஆங்கிலப் பேச்சு நாவன்மையும், எழுத்துவன்மையும் மட்டும் பெற்றவர் அல்லர், பிரெஞ்சு, ஜெர்மன், வடமொழி, தமிழ், தெலுங்கு' இந்தி, மலையாளம் போன்ற மொழிகளிலும் சிறப்பாகக் கற்ற பன்மொழிச் செல்வியாகவும் திகழ்ந்தார்!

'தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் பெருமானின் வாக்குக்கு ஏற்றவாறு, தனது தந்தையார் பெயரை நிலைநாட்டும் வகையில், ராணி மேரி கல்லூரி முதல்வராகவும், இசைப் புலமையும், இந்தியப் பாராளுமன்ற உறுப்பினராகவும், சர்வதேச சங்கத்து அமைதிப் பணியாற்றும் பணியாளராகவும் பன்மொழிப் புலமையுடனும் சிறந்து விளங்கியவர் நல்லமுத்து அம்மையார்!

''தக்கார் தகவிலர் என்பது, அவரவர் எச்சத்தாற் காணப்படும்'' என்ற வள்ளுவர் பெருமானின் வாய்மைக்கு ஏற்றவாறு, முத்துலட்சுமி அம்மையார் குடும்பத்து வாழ்வியல் வரலாறு இது.

## 3. தாமரை இலையின்மீது தத்தளித்தக் கல்வி நீர்!

"காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு தரும் நல்ல பாட்டு:
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!"

அமரகவி பாரதி, பாப்பா பாட்டு என்ற தலைப்பில் மேற்கண்டவாறு பாடினார்! ஏன் இந்தக் கருத்தை அவர் பாப்பா பாடலிலே வைத்துப் பாடினார்? இது சிந்திக்கத் தக்க ஒரு கல்வித் தத்துவம்: படிப்பின் பக்குவப் பாங்கு! இளமை பெறவேண்டிய பண்பு! வாழ்வியல் நெறிகளுக் குரிய வழிகாட்டி விளக்கம்.

இந்தப் பண்பைத்தான், 'கல்வியதை விடேல்' கற்றது ஒழுகு, நீதிநூல் பயில், என்று பாரதியார் தனது 'புதிய ஆத்திசூடி'யில் இளைஞர்களது கல்வியைப் பற்றி எடுத்து உரைத்துள்ளார்.

'இளமையில் கல்' என்று ஔவை பெருமாட்டி பாடினார்! 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழியும் இளமைப் பருவத்தின் பக்குவத்தை விளக்கிக் கூறியுள்ளது!

எனவே, கேடில்லாத மேன்மையான செல்வம் என்ற கல்வியை, படிப்பை, இளம் வயதிலே கற்கவேண்டும். அந்தப் பருவத்தில் படிக்கும் படிப்பு, பிள்ளைகளின் மன திலே பசுமரத்தாணி போல பதியும் பக்குவம் உடைய தாகவே பதிந்துவிடும்.

அதனால்தான் பாரதி, பாப்பா என்ற தலைப் பிலே படிப்புப் பற்றிப் பாடினார். அதுவும் காலை எழுந்தவுடன் படிப்பு என்றார். அப்படிப் படிக்கும் படிப்பு, படித்தவரின் இறுதிக் காலம் வரையிலும் மட்டு

மல்ல; அவன் காலமான பிறகும்கூட அவன் படித்தக் கல்வியின் அடையாளங்கள் நாட்டில் மணம் வீசிக்கொண்டே இருக்கும்.

அத்தகையக் கல்வியை-ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும், இளம் வயதிலேயே ஊக்கமுடன் கற்றாக வேண்டிய பருவம் இளமைப் பருவம். அதனால்தான் பாரதி, பாப்பா பாடலில் "கல்வி" என்று கூறாமல்-படிப்பு என்று எழுதினார்.

படிப்பு என்ற சொல்லிலே உள்ள "படி" என்ற பகுதிக்குப் பொருள் என்ன? படி என்றால் Read என்ற படிப்பதையும் குறிக்கும், படி என்றால் உயரமான ஓர் இடத்தில் ஏறுவதற்குரிய Steps என்ற படிக்கட்டுக்களைக் குறிக்கும்; படி என்றால், ஓர் எழுத்துப் பிரதியிலே இருந்து எடுக்கும் மறு உருவான நகலை Duplicateயும் குறிக்கும், படி என்றால் ஒருவனது கல்வியை அளக்கும் Measurement முகத்தளவின் கருவியான அளக்கும் படியையும் குறிக்கும்!

எனவே, பாரதியார் பாடிய படிப்பு என்ற பதத்துக்குரிய பொருள்கள் மேற்கண்டவை! இளமையில் ஒருவன் கற்கும் கல்வியானது, அவனது வாழ்வியலுக்குரியசிகரத்தை அடைய ஏறிடும் படிக்கட்டாகப் பயன்படும். அதாவது Steps ஆகப் பயன்படும்.

படிப்பு என்ற சொல்லின் பகுதியான படி என்ற சொல் ஒருவன் இளமையில் தான் கற்றக் கல்விக்குரிய நகலாகவும் தென்படும். ஒருவன் தனது இளமைக் காலத்திலே எவ்வளவு தூரம் படித்தான் என்பதற்குரிய அளக்கும் கருவியான 'படி' போலவும் அளந்து காட்டும்; எனவே, அதனால் தான் பாரதி தனது பாடலிலே 'படிப்பு' என்று எழுதினார். அதுவும் பாப்பா பாடலிலே எழுதினார். கிழவா என்று பாப்பாவுக்குப் பதிலாக எழுதாததின் மர்ம அறிவுரை இது.

இளமைப் பருவம் அத்தகைய ஒரு பண்பட்ட பக்குவப் படுத்தப்பட்ட நிலம் போன்ற பருவமாகும். அதனால் தான், இந்தியப் பிரதமராக இருந்து மறைந்த நேரு பெருமான் கூட, தனது பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாக கொண்டாடுமாறு கேட்டுக் கொண்டார்.

திருமதி முத்துலட்சுமி அம்மையாரும், அவரது தங்கை நல்லமுத்து அம்மையாரும், உடன் பிறந்த சகோதரருமான ராமையாவும், பெயரும் புகழும் அவர்களுக்குப் போட்டிப் போட்டுக் கொண்டு வளர்ந்தது என்றால், அதற்குக் காரணமே, அவர்கள் குடும்பப் பண்பாட்டுக் கேற்றவாறு வளர்ந்த, தந்தையாரின் பேரறிவும் பேராதரவும், அதற் கேற்றவாறு பள்ளிப் பருவத்திலே அவர்கள் கற்றக் கல்வி மீது இருந்த பற்றும் அக்கறையும், அதற்காக அவர்கள் பட்ட கஷ்டங்களும்தான் காரணமாகும்.

அந்த இளமைக் காலப் பருவம்தான், கற்பதற்காகப் பட்டக்கல்விச் சுமைகள்தான், பிற்காலத்தில் அவர்கள் பெற்ற உலகம் போற்றும் சிறப்புக்களுக்குரிய அடிப்படைச் சம்பவங்களாகத் திகழ்ந்தன.

அடுப்பூதும் பெண்களுக்கு எதற்கு படிப்பு என்ற கேள்விகளைக் கேட்டவர்கள் இடையே, தமிழ் மொழியே படிக்க முடியாத நிலையுள்ளபோது நம்நாட்டுப் பெண்கள் ஆங்கில அறிவு எப்படிப் பெற முடியும்?

இந்த அவல நிலையை அறிந்த புதுக்கோட்டை சமஸ்தானா திவானாக இருந்த சேஷைய சாஸ்திரி, துணிந்து ஒரு தொடக்க நிலைப் பள்ளியைத் துவக்கினார். சாஸ்திரிகள் மனநிலையை உணராத புதுக்கோட்டை மக்கள் தங்களது பிள்ளைகளை அவரது பள்ளியிலே படிக்க அனுப்ப மறுத்துவிட்டார்கள்.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை அனுப்பாதது ஏன் என்று எண்ணிய சாஸ்திரி, இன்றைய பள்ளியில்

படிக்கும் மாணவர்கள் சம்பளம் கட்டிப் படிப்பதுபோல, ஏன், பள்ளிக்கு வரும் பிள்ளைகளுக்கும் சம்பளம் தரக் கூடாது என்று சிந்தித்து ஏற்பாடு செய்தார்.

போதிய மாணவர்கள் வராததால், அப்பள்ளியிலே சில ஆசிரியர்களும் சில மாணவிகளுமே இருந்தார்கள். ஆசிரியர்கள் என்றால், அந்த ஆசிரியர்களும் நம்மவர்கள்தானே; இதற்கு முன்பு தமிழ்நாட்டில் படித்தவர்கள் தானே; என்று எண்ணக்கூடும் அல்லவா? அதுதான் இல்லை. அவர்கள் வெளி மாநிலத்திலே படித்த வெளி மாநிலத்துப் பெண்களாவர்!

ஆனால், நமது முத்துலட்சுமியும் கூட, சாஸ்திரிகள் பள்ளியிலே படிக்கவில்லை; அவர், ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து படிக்கும் பள்ளியிலே படித்தார். என்ன காரணம்? அங்கேதான் படித்த, பட்டம் பெற்ற ஆசிரியர்கள் இருந்தார்கள்-அதனால்!

முத்துலட்சுமியை அவர் தந்தை ஒரு திண்ணைப் பள்ளியிலே சேர்த்தார்! அக்காலத்துத் திண்ணைப் பள்ளியென்றால் அது எப்படி இருக்கும் என்று கேட்பீர்கள் இல்லையா? இதோ பாருங்கள் திண்ணைப் பள்ளியை!

"பள்ளிப் பிள்ளைகள் வரிசையாக உட்கார்ந்திருப்பார்கள். இவர்கள் எதிரில் மண் பரப்பப்பட்டு, அதில் ஹரி நமோத்து சிந்தம், குருவே வாழ்க, குருவே துணை" என்ற கோஷங்களைப் போட்டபடியே அமர்ந்து, 'ஹரி' என்றுமணலில் எழுதியெழுதி அழித்தபடியே இருப்பார்கள்.

மற்றொரு வரிசையில் வேறு சில மாணவர்கள் பிரம்பு வைத்திருக்கும் சட்டாம்பிள்ளையிடம் கைகாட்டிக் கொண்டு, விவேக சிந்தாமணி, அறப்பளி சுரசதகம், தண்டலையார் சதகம், குமரேச சதகம் போன்ற சதகங்களிலே உள்ள நூறு நூறு பாடல்களையும் பாராமலே மனப்பாடம் செய்ததை ஒப்பித்துக் கொண்டிருப்பார்கள்.

ஏதாவது ஒரு தவறை சட்டாம்பிள்ளைக் கண்டால் ஒருவன் சதகத்தின் பாடலை உரைநடை போல ஒப்புவிக்க, வரிசையிலே உள்ளவர்கள் அனைவரும் பின் பாட்டு பாடுவதுபோல் இணைந்திசைக் குரலில் கோஷமிட்டுப் பாடிக்கொண்டே நூறு பாடலையும் பாடி முடித்தபின்புதான் இருக்கும் இடத்தை விட்டு எழுவார்கள். ஒன்றிரண்டு வாரங்களில் நூறு பாடலையும் மனப்பாடம் செய்து ஒப்புவித்துவிட்டு, அடுத்தபடியாக வேறு இலக்கியங்களைப் படித்துப் பின் பாட்டுப் பாடி மனனம் செய்வார்கள். இவ்வாறு இலக்கிய இலக்கணங்களைக் கற்ற மேதைகள் பலருண்டு! இதுதான் திண்ணைப் பள்ளிக்கூடம்.

மணலில் எழுதி முடித்தவுடன், பனை ஓலைகள் தரப் படும். இந்த ஓலையில் எழுத ஆசிரியர் பயிற்சியும் கொடுப் பார். இப்படிப்பட்ட பள்ளியில்தான் முத்துலட்சுமியை அவரது தந்தையார் சேர்த்தார்.

அதற்குப் பிறகு ஆண்கள் படிக்கும் பள்ளியில் அவர் சேர்க்கப்பட்டார். அப்போதே ஆங்கில அரிச்சுவடியைத் தனது தந்தைக்குத் தெரியாமலே படித்தார்! இந்த படிப்பு அவரை ஆறாம் வகுப்பிலே சேர்த்தது.

இதற்கிடையில் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரி யில் பணியாற்றிய நாராயணசாமி தனது முதல்வர் வேலையை சில மனவேறுபாடு காரணமாக ராஜிநாமா செய்துவிட்டார். இதனால், முத்துலட்சுமி படிப்புக்குத் தடை ஏற்பட்டது; படிப்பை விட்டு முத்துலட்சுமி நிறுத்தப் பட்டார்.

அதே நேரத்தில், அக்காலத்தில் ஒரு பெண்ணை பதி னோராம் வயது வரையில்தான் படிக்கவைக்க வேண்டும் என்று பெற்றோர்கள் முடிவுக்கு வருவார்கள். அதற்குமேல் பெண்ணுக்கேற்ற கணவனைத் தேட ஆரம்பித்து விடுவார் கள். முத்துலட்சுமி பள்ளியை விட்டு நிறுத்தப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஏன் முத்துலட்சுமியை படிப்பை விட்டு நிறுத்தி விட்டார்கள் என்று சிந்தித்த ஆசிரியர் பாலையா, ஒருநாள் முத்துலட்சுமி வீட்டுக்கு வந்து சந்திரம்மாளைச் சந்தித்து, முத்துலட்சுமியின் கல்வித் திறனை, ஆர்வத்தை, அவர் படிப்பில் காட்டிடும் அக்கறைகளை உருக்கத்தோடு எடுத்துக் கூறினார்.

'முத்துலட்சுமியை மீண்டும் பள்ளிக்கு அனுப்புங்கள்' என்று ஆசிரியர் பாலையா கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, அவரது தாயார் மீண்டும் அவரைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தார். 8ஆம் வகுப்பு படிக்கும்வரை தடையேதும் இல்லாமல் அவர் படித்தார்!

இதற்கிடையில் முத்துலட்சுமி பூப்பெய்திவிட்டதால், அதற்கு மேல் அவரைப் பள்ளிக்கனுப்பாமல் பெற்றோர்கள் நிறுத்திவிட்டார்கள். ஆனால் வீட்டிற்கே ஆசிரியர் வந்து பள்ளிப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க பெற்றோர் ஏற்பாடு செய்தார்கள்.

வீட்டிலேயே 9,10,11-ம் வகுப்புப் பாடங்களை மெட்ரிகுலேஷன் வகுப்புப் பாடங்களைத் தனது தந்தையார் மூலமே, கற்றுத் தேர்ந்தார் முத்துலட்சுமி.

அந்த ஆண்டு நடைபெற்ற மெட்ரிகுலேஷன் தேர்வில் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியிலே இருந்து நூறு மாணவர்கள் எழுதிய தேர்வில் பத்தே பத்துப் பேர்கள் தான் தேர்வு பெற்றார்கள். அந்த பத்துப் பேர்களிலே முத்துலட்சுமியும் ஒருவர் என்பதால், புதுக்கோட்டைக் கல்லூரியினரும், அதன் முக்கிய கல்வியாளர்களும் மெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

அக்காலத்தில் பெண்கள் படிப்பது, குறிப்பாக ஆங்கிலம் கற்பது என்பது அறவே இல்லாதிருந்த நாளாதலால்,

முத்துலட்சுமி வெற்றியை எல்லாரும் பாராட்டியதைக் கண்டு, தந்தை நாராயணசாமி மிக்வும் பூரிப்படைந்தார்! அவரது நண்பர்களும் அவரை வீடுதேடி வந்து பாராட்டி னார்கள்

முத்துலட்சுமியின் மெட்ரிகுலேஷன் தேர்வு வெற்றி யைக் கண்ட ஓர் ஆரம்பப் பாடசாலை. தனது பள்ளிக்கு ஆசிரியராக வருமாறு அழைப்பு அனுப்பியது. ஆனால், அவர் அதை ஏற்கவில்லை

எப்படியாவது பட்டப்படிப்பு படித்து பட்டம் ஏதாவது பெறவேண்டும் என்ற ஆசை முத்துலட்சுமியின் மனதிலே நாளாகவாக சுடர்விட ஆரம்பித்தது. திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் அல்லது பாளையங்கோட்டை பெண் கள் கல்லூரியிலாவது தன்னைச் சேர்ந்து மேற்படிப்புக்கு உதவி செய்ய வேண்டும் என்று அவர் தனது தந்தையிடம் விடாப்பிடியாகக் கெஞ்சினார்.

மேற்படிப்பு படிக்க வைக்கவும், கல்லூரியில் சேர்ந் தால் ஹாஸ்டல் வசதிக்குப் பணம் கட்ட முடியாத நிலை யிருக்கும் போது, எப்படியம்மா உன்னைச் சேர்ப்பது என்று நாராயணசாமி மனவருத்தத்துடன் மகளிடம் கூறினார்.

இருந்தாலும், முயற்சி செய்வோமே என்ற எண்ணத் தில்; புதுக்கோட்டை கல்லூரியிலேயே தனது மகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அவர் கல்லூரி நிர் வாகத்தைக் கேட்டார்.

நாராயணசாமி முதல்வராக இருந்த கல்லூரி, தனது சட்டதிட்ட விதிகளைக் காட்டி; ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்க்க முடியாது என்று கல்லூரி நிர்வாகம் கூறிவிட்டது. மனமுடைந்து போன முன்னாள் முதல்வர் விடாப்பிடியாக புலிக்கோட்டை சமஸ்தான ஆட்சியிடமே நேரிடையாக முறையிட்டார்.

நாராயணசாமி முன்னாள் முதல்வர் என்பதாலும், முத்துலட்சுமி மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றிபெற்ற திறமையின் காரணத்தாலும், புதுக்கோட்டை அரசர் முத்துலட்சுமியைக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

ஆண்கள் கல்லூரியில் ஒரு பெண்ணைச் சேர்த்துக் கொள்வதால், எவ்வித கெட்ட பெயரும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற நிபந்தனையுடன் முத்துலட்சுமியைக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளுமாறு மன்னர் ஆணையிட்டார். அதனால், முத்துலட்சுமி அரசர் உத்தரவுக்கு ஏற்ற வாறு அடக்கம் ஒழுக்கம், ஒழுக்க முறைகளோடு கல்லூரி யில் சேர்ந்தது முதல்-வெளியே வரும்வரை நடந்து கொண்டு நற்பெயர் பெற்றார்.

இவ்வாறு முத்துலட்சுமிப் படித்தக் கல்லூரியில் அவருடன் படித்தவர்கள் பலர் பிற்காலத்தில் பெரும் பதவிகளை வகித்தார்கள். அவர்களுள் சுதந்திரப் போராட்ட வீரரும் காங்கிரஸ் தலைவராக இருந்தவரும், சட்டமன்ற பதவி வகித்தவரும், சிறந்த பேச்சுவன்மை படைத்த நாவலரும், பெருந்தலைவர் காமராசரின் அரசியல் பிதாமகனுமான சத்தியமூர்த்தி என்பவர் ஒருவராவார்.

முத்துலட்சுமியின் கல்வி அறிவாற்றலையும், அடக்கம் ஒழுக்க உணர்வுகளையும், கண்ட மகாராஜா கல்லூரி பேராசிரியர் அதன் முதல்வர் ராதாகிருஷ்ணன், கல்லூரி நிர்வாகத்தினர் எல்லாருமே வியந்து பாராட்டி, என்ன உதவிகள் தேவையானாலும் செய்வதாக அவர்கள் உறுதியளித்தார்கள்.

ஒரு வழியாகத் தனது 20-ம் வயதில் கல்லூரிக் கல்வி பெற்று, சென்னை மருத்துவக் கல்லூரியில் சேருவதற்காக சென்னை வந்து சேர்ந்தார் முத்துலட்சுமி. அவரது கன்

பார்வைக் கோளாறு சம்பந்தமாக, மூக்குக் கண்ணாடியும் போட்டுக் கொண்டார்.

பலாப் பழத்தில் ஈக்கள் மொய்ப்பது போல, ஆண் மாணவர் கல்லூரியில் ஒரு பெண் மாணவி படிக்கின்றார் என்றால், மாணவர்கள் சேட்டைகள் எப்படியெப்படி எல்லாம் ஏற்படக் கூடும் என்பதை எண்ணிப் பார்ப்பவர்களுக்கு மட்டும்தான், முத்துலட்சுமியின் ஒழுக்க உயர்வுகளின் அருமைகளை உணர்ந்து பாராட்டுவார்கள். அவ்வளவு சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் அவர் ஆளானாலும் அரசரது ஆணைக்கு ஊறு நேர்ந்து விடக் கூடாதே என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

முத்துலட்சுமி தனது தேர்வை முடித்துக் கொண்டு, உடல் நலிவைச் சீரமைத்துப் பாதுகாத்துக் கொள்ள ஓய்வு எடுத்துக்கொண்டார். அந்த நேரத்தில் அவரது தந்தையார், ஆங்கில மாமேதைகளான ஷேக்ஸ்பியர் டென்னிசன், மில்டன், ஷெல்லி ஆகியோர் எழுதிய பல நூல்களையும், மகளுக்குப் பாடம் எடுத்துப் போதித்து வந்தார்.

கல்லூரி நிர்வாகத்தின் வாசக சாலையில் இருந்து, அடிசன், கோல்டு ஸ்மித், மங்கோ பார்க் சுற்றுப் பயணங்கள் போன்ற பல நூல்களைக் கொண்டு வந்து கொடுத்து மகளைப் படிக்கச் செய்தார்.

தேர்வு முடிந்த பின்பு, ஓய்வுக்காக வீட்டில் இருந்த போது, தனது தம்பி ராமையாவுக்கும் முத்துலட்சுமியே தேர்வு பாடங்களைப் போதித்தார்! அக்காள் எடுத்த பாடப் பயிற்சியால், அவர் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் வெற்றி பெற்றார்.

முத்துலட்சுமி தனது கல்விக்காகத் தாமரை இலையின் மீது தத்தளிக்கும் கல்வி நீராக அலைமோதிக் கிடந்தவர், இறுதியில் தனது தந்தையாரது அரிய முயற்சிகளால்

கல்வித் துறையில் நீரோடு நீராகக் கலந்துவிட்டதுமல்லாமல், தனது தம்பியின் கல்விக்கும் ஒளிவிளக்காக நின்றார்.

## 4. டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழ்ப் பெண்மணி

இயற்கையாகவே மெலிந்த தோற்றம் உடையவரான முத்துலட்சுமி, தேர்வு முடிந்த பின்பு வந்த விடுமுறையில் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று தனது வீட்டுக்கு வந்தபோது, அவருடைய தாயார் சந்திரம்மாள் நோய் வாய்ப்பட்டுப் படுத்தப் படுக்கையாக இருந்தார்.

தனது தாயாருக்குரிய சிகிச்சையை மருத்துவரிடம் கேட்பதும், அவர் கூறியவாறு தாயாரைப் பார்த்துக் கொள்வதுமாக இருந்த முத்துலட்சுமிக்கு, தானும் ஒரு டாக்டராக ஆகிவிட்டால் என்ன என்ற சிந்தனை தோன்றிற்று.

அப்போது அவர் இண்டர்மீடியட் படிப்புவரைப் படித்திருந்தார், அதனால் சென்னை நகருக்கு வந்து மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து டாக்டர் பணிக்குப் படிக்கத் தனது தந்தையாரை உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால், சந்திரம்மாளுக்கு தனது மூத்த மகளுக்கு ஒரு திருமணத்தைச் செய்து கண்ணால் பார்த்து விட வேண்டும் என்ற கவலையால், அவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்தப் படுக்கையானார். அந்தக் கவலை அதிகமானதால் அவருக்கு டைபாய்டு ஜுரமாக முற்றி விட்டது.

புதுக்கோட்டை சமஸ்தான டாக்டர்கள் எல்லாம் சிகிச்சை செய்தார்கள்; பயனில்லை. கடைசியாக, ஓர்

அமெரிக்க மருத்துவரின் சிகிச்சையால் சந்திரம்மாள் உயிர் மீண்டார். இந்த இடைவெளியில் தானும் ஒரு டாக்டராக ஆகவேண்டும் என்ற ஊக்கமும் எண்ணமும் அவருக்கு அதிகமாயிற்று

அந்த வேளையில், தந்தையார் நாராயணசாமியிடம் கல்வி கற்ற பழைய மாணவரான சீனிவாசராவ் என்பவர், புதுகோட்டைக்கு வந்தார். அவரிடம் சென்னை மருத்துவ கல்லூரியில் தனது மகள் முத்துலட்சுமியைச் சேர்ப்பதற்கு உரிய விவரங்களை அவர் கேட்டறிந்தார். அந்த மாண வர், தான் முன்னிருந்து அதற்கான எல்லா உதவிகளையும் செய்வதாகக் கூறினார்,

அதனால், நாராயணசாமி, 1907-ம் ஆண்டில், மகளை மருத்துவக் கல்லூரியில் சேர்ப்பதற்காக முத்துலட்சுமி யுடன் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார்! அங்கே பழைய மாணவர் சீனிவாசராவ் உதவியால் தனது மகளை மருத்துவக் கல்லூரியில் சேர்த்து விட்டார்.

சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரியில் தங்கிப் படிப்பதற்குரிய பெண்கள் தங்கும் விடுதி கிடையாது. ஆகையால், தனியாக ஒரு வீட்டைப் புரசைவாக்கம் பகுதியில் வாடகைக்குப் பார்த்து, அதில் மகளும் தானு மாகத் தங்கினார்கள்.

நாராயணசாமி எப்போதாவது ஒரு முறை புதுக் கோட்டைக்குப் போவார். அப்போது அவருடைய நண் பரும், வீட்டுக்காரருமான கிருஷ்ணசாமி என்பவர், முத்து லட்சுமிக்கு தந்தையைப்போல இருந்து பாதுகாத்து வந் தார், அடுத்த சில மாதங்களில் சந்திரம்மாளும் தம்பி தங்கைகளும் புதுக்கோட்டையிலே இருந்து சென்னைக்கே வந்து தங்கிவிட்டார்கள்.

முத்துலட்சுமியின் தம்பி ராமையா சென்னை கிறிஸ் தவக் கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் சேர்க்கப்பட்டார்.

அவரது தங்கைகளான சுந்தரம்மாளும், நல்லமுத்துவும் எழும்பூரில் உள்ள பி.டி. பள்ளியில்சேர்க்கப்பட்டார்கள்.

புதுக்கோட்டை சமஸ்தான அரசு, முத்துலட்சுமியின் மருத்துவக் கல்விக்கான உதவித்தொகையாக வருடத்துக்கு 180 ரூபாயைத் தந்துதவியது. அந்த ரூபாயில் முத்து லட்சுமி தனக்குரிய புத்தகங்களை வாங்கிக் கொண்டுப் படித்து வந்தார்.

இந்த நிலையில், முத்துலட்சுமியை ஆஸ்துமா என்ற நோய் பற்றிக்கொண்டது. அதனால், படிக்கும்போதும், கல்லூரிக்குள்ளும் சதா இருமிக் கொண்டே இருந்தார் நோய் தொல்லை அதிகமாக அவரை வருத்தியது, இருந்தும் மருத்துவக் கல்லூரியின் முதல் ஆண்டுத் தேர்வில் கலந்து கொண்டார்.

ஆஸ்துமா நோயால் அவதிப்படும் முத்துலட்சுமியின் அவல நிலையைக் கண்டு டாக்டர் தாமஸ்சிங் என்பவர், அவருக்குச் சிகிச்சை அளித்தார். அதற்குப் பிறகு ஆஸ்துமா நோயின் வேகம் குறைந்து-சுகமானது.

இந்த நேரத்தில் டாக்டர் நஞ்சுண்டராவ் என்பவர், முத்துலட்சுமிக்கு அறிமுகமானார்! அவர் ஒரு பொதுநலத் தொண்டு புரியும் குணம் உடையவர். அப்போதைய சுதந்திரப் போர் கட்சியாகக் காட்சியளித்த காங்கிரஸ் கட்சியின் செயல்களில் அடிக்கடி ஈடுபட்டு, தேச சேவை புரியும் தேசியவாதியாகவும் அவர் திகழ்ந்து வந்தவர். அத்தகையவர் தொடர்பு முத்துலட்சுமிக்கு உண்டானது ஓரளவு அவருக்கு மனத்திருப்தியாகவும், ஆதரவாகவும் இருந்தது.

நஞ்சுண்டராவ் தேசியவாதியானதால், அவர் காங்கிரஸ் கட்சியின் பிரபல தலைவர்களான பாலகங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, ஆகியோரின் தன்னலமற்ற காங்கிரஸ் கட்சியின் செயல்களைப் பாராட்டி

நாராயணசாமியுடன் பேசுவார்; அப்போதுள்ள காங்கிரஸ் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை அவர் புகழ்ந்து கூறுவார். நாராயணசாமி அவற்றையெல்லாம் கேட்டு மகிழ்ந்து கொண்டிருப்பார்.

ஆனால், இவை போன்ற அரசியல் விவாதங்களில் முத்துலட்சுமி கலந்து கொள்ள மாட்டார். நெருப்புப் பறக்கும் ராவ் பேச்சுக்களையும், அதற்கு நாராயணசாமி கூறும் வாதங்களையும் முத்துலட்சுமி ஆழ்ந்து கவனிப்பார். ஆனால், ராவ் கூறும் விவாதங்களில் நியாயங்கள் இருப்ப தைக் கண்ட முத்துலட்சுமி, காங்கிரஸ் பேரியக்கச் செயல் களுக்கு ஆதரவு காட்டியபடியே மௌனமாக இருப்பார். அதற்குக் காரணம், ராவ் பேசும்-காட்டும், காரண, காரி யங்களே ஆகும்.

டாக்டர் ராவ், தனது வீட்டில் அப்போதிருந்த அரசி யல் தலைவர்களை எல்லாம் அழைத்து விருந்து வைப்பார்! அந்த விருந்துக்கு முத்துலட்சுமியையும் அழைத்துக் கலந்து கொள்ளச் செய்வார். அதனால், முத்துலட்சுமிக்கு அந்த இளம் வயதிலேயே அரசியல் தலைவர்களையும், கட்சி முக்கியஸ்தர்களையும் நேரில் கண்டு உரையாடிடும் வாய்ப்பும் பழக்கமும் உருவானது.

இவ்வாறு கலந்து கொண்ட ராவ் வீட்டு விருந்து ஒன்றில், அமரகவி சுப்பிரமணிய பாரதியாரையும் முத்து லட்சுமி நேரில் பார்க்கும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. அப்போது பாரதி, 'இந்தியா' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார்.

அந்தப் பத்திரிகை, அப்போதுள்ள காலகட்ட நிலைக் கேற்ப, பெண்ணுரிமை பற்றிய கட்டுரைகளை வெளி யிட்டது. அக் கட்டுரைகளை எல்லாம் முத்துலட்சுமி படித் துப் படித்து எழுச்சி உள்ளம் பெற்றிருந்தார். அதனால்,

அப்படிப்பட்ட ஒரு பத்திரிகை ஆசிரியரை நேரில் சந்தித்தோமே என்று மகிழ்ச்சியில் முத்துலட்சுமி திளைத்தார்.

அந்த அம்மையாரைச் சந்தித்த மக்கள்கவி பாரதி, 'பெண்ணுரிமைகளைப் பற்றி அடிக்கடி ஏதாவது கட்டுரைகள் எழுதுங்களேன்' என்று முத்துலட்சுமியைப் பாரதியார் நேரிலேயே கேட்டுக் கொண்டார். பாரதியாரே நம்மைக் கட்டுரை எழுதுமாறு கேட்டுக் கொண்டாரே என்ற சந்தோஷத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை

நஞ்சுண்டராவ், தனது வீட்டில் நடத்தப்படும் விருந்து வைபவங்களில் கலந்துகொள்ள வரும் அரசியல் தலைவர்களை வரவேற்றுப் பேசவும், விருந்து விழா முடிந்ததும் நன்றி அறிவிக்கும் பேச்சுக்களைப் பேசுமாறும் முத்துலட்சுமியிடம் கேட்டுக் கொள்வார்.

சென்னையில் ஒரு நாள் நடந்த காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திற்கு, ஐதராபாத் நகரிலிருந்து சென்னைக்கு கவிக்குயில் சரோஜினிதேவி வந்திருந்தார். அவர் கணவர் டாக்டர் என். ஜி. நாயுடுவுக்கும் ராவ் விருந்து ஏற்பாடு செய்திருந்தார்.

அவர்கள் கலந்து கொண்ட விருந்து வைபவத்தில் முத்துலட்சுமியையும், சரோஜினிதேவி தம்பதிகளோடு சேர்த்து காங்கிரஸ் கட்சி நடத்திய ஒரு மாநாட்டுக்கு ராவ் அனுப்பி வைத்தார்.

அந்த மாநாட்டிலே அப்போதைய காங்கிரஸ் தலைவராக இருந்த கோபால கிருஷ்ண கோகலே பேசிய வரவேற்புரையையும், சரோஜினி நாயுடுவும் வேறு சில மங்கையர்களும் பேசிய வீரமான பேச்சுக்களும் முத்துலட்சுமியை பெரிதும் கவர்ந்தன. இந்த மாநாட்டிலே அசலாம்பிகை அம்மையார் என்ற ஒருவர்தான் தமிழில் முழக்கமிட்டார்.

இந்தியநாடு விடுதலைபெற வேண்டும் என்ற சுதந்திரப் போராட்ட பாசறை போன்ற அந்த மாநாட்டில், ஒவ்வொருவரும் பேசிய பேச்சுக்களது கருத்துக்கள், வீர உணர்வுகள், அனைத்தையும் பார்த்த, கேட்ட முத்துலட்சுமிக்கு, அவருள்ளும் அத்தகைய எழுச்சி உணர்வுகள் ஊடுருவிப் பற்றின! ஆனால், அரசியல்வாதியாகத் தானும் மாற வேண்டும் என்ற உணர்வல்ல அது!

அடுத்து ஒருவர்; அவர் பெயர் டாக்டர் சி.பி. ராமாராவ்! முத்துலட்சுமிக்குப் பழக்கமானவர்! அவரும் ஓர் அரசியல்வாதி! சுறுசுறுப்பான அரசியல், கட்சிச் செயல்களைச் செய்திடும் செயல்வீரர்! எந்தெந்த அரசியல் கூட்டங்களுக்கு அவர் செல்வாரோ, அந்தக் கூட்டங்களுக்கு அவரும், அவரது இரு மகன்களும், முத்துலட்சுமியும் சேர்ந்தே செல்வார்கள்.

சென்னை அடையாறு! அங்கே ஒரு கல்வியாளர்களது கூட்டம் நடந்தது! அந்தக் கூட்டத்தில் இந்திய இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் பற்றிய கருத்துக்களைப் பற்றி ஓர் உரையாடல் நடந்தது!

அந்த பேச்சில்; கவிக்குயில் சரோஜினி தேவியும், அன்னி பெசண்ட் அம்மையாரும் கலந்து கருத்துரை வழங்கினார்கள். அக்கூட்டத்தில், அந்த இருபெரும் வீராங்கனைகளுடன் முத்துலட்சுமியும் கலந்து கொண்டு ஓர் அரிய பேச்சு பேசும் நிலையேற்பட்டு விட்டது.

அன்னி பெசண்டின் ஓர் அற்புதமான ஓர் ஆங்கில உரையை அன்றுவரை முத்துலட்சுமி கேட்டறியாததாக இருந்தது. அதுபோலவே, கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் வீரமுழக்கமான ஆங்கிலப் பேச்சும் முத்துலட்சுமியை மெய்சிலிர்க்கச் செய்தது.

இந்தப் பேச்சுக்களைக் கேட்பதற்கு முன்னாடியே பேசிய முத்துலட்சுமியின் பேச்சில் ஒரு புதிய மெருகு சுடர் விட்டது போன்ற நினைப்பு உருவானது. பூவோடு சேர்ந்த நாரும் மணப்பது போன்ற ஒரு பிரமை முத்து லட்சுமிக்கு ஏற்பட்டதில் வியப்பில்லை அல்லவா?

ஆனாலும், 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலேயே கண்ணாக இரு' என்பதற்கேற்றவாறு, தனது மருத்துவப் படிப்புக்கோ, கல்லூரிக்குப் போகும் தொடர்புக்கோ எவ்விதக் குந்தகமும் ஏற்படாமல் தனது கல்வியைத் தொடர்ந்தார்!

இவ்வாறு, ஆண்டுதோறும் கல்லூரி விழாக்களிலே கலந்துகொண்டு தங்க மெடல்களும், நற்சான்றிதழ்களும் பெற்ற நற்பெயரோடு 1912ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தோடு இறுதியாண்டுத் தேர்விலும் கலந்து கொண்டு மருத்துவப் படிப்புப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்தவர் முத்து லட்சுமி!

ஆண்கள் அணியிலும் சரி பெண்கள் அணியிலும் சரி, மருத்துவ வல்லுநர் டாக்டர் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி முத்துலட்சுமிதான் என்ற புகழையும், மரியாதையையும், மதிப்பையும் பெற்றார்!

தென் இந்தியாவிலேயே மிக உயர்வான பட்டங்களாக மதிக்கப்பெற்ற M.B.&C.M. போன்ற பட்டங்கள் எல்லாம் முத்துலட்சுமியைத் தேடி வந்தன. அதனால் முத்துலட்சுமி டாக்டர் முத்துலட்சுமி என்ற மருத்துவ வித்தகர் பட்டம் பெற்றார்!

டாக்டர் முத்துலட்சுமியுடன் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்களில் ஜே.இ. குமரப்பா என்பவரின் சகோதரி

மிஸ். ராஜாமணி என்பவர் குறிப்பிடத்தக்க ஒருவராவார்! அதுபோலவே, மருத்துவக் கல்லூரி பேராசிரியர்களான Col. Vengeyza வங்கேய்சா, டொனோவன் Col. Donovan ஆண்டர்சன் Col. Anderson மேஜர் நிப்லாக் Major Niblock, கிஃபோர்ட் Col. Giffard ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்!

தனது மகள் முத்துலட்சுமி, முதல் பெண் டாக்டராகத் தேர்வடைந்ததை எண்ணியெண்ணி மகிழ்ச்சி அடைந்த நாராயணசாமி, தான் பட்ட கஷ்ட நஷ்டங்கள் வீண் போகவில்லை என்று சந்தோஷப்பட்டுக் கொண்டு, தனது நண்பர்களிடமும், முத்துலட்சுமிக்காக உதவிகளைச் செய்த அனைவருக்கும் நேரிடையாகச் சென்று நன்றி கூறிக் கொண்டார்!

டாக்டர் முத்துலட்சுமியைப் போலவே, அவருடைய தம்பி ராமையாவும், சகோதரி நல்லமுத்துவும் ஒவ்வொரு தேர்விலும் கலந்துகொண்டு படிப்பில் முன்னேறிக் கொண்டிருந்ததைக் கண்டு, அக்காளும், அப்பாவும் பெரும் களிப்படைந்தார்கள்.

மற்றொரு சகோதரியான சுந்தரம்மாள் கல்வியில் பலவீனமாக இருந்ததைப் பார்த்த முத்துலட்சுமி, தனது தங்கையை வடமொழிப் புலமை பெறவும், இசைப் புலமை பெறவுமான ஆக்கவழிகளைச் செய்தார்.

மருத்துவக் கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்ற முதலாவது தமிழ்நாட்டுப் பெண் டாக்டர் முத்துலட்சுமி என்பதை அறிந்த பத்திரிகைகள், அவருடைய படங்களை முதல் பக்கத்திலே வெளியிட்டு பாராட்டி மகிழ்ந்தன.

இந்த அரிய வெற்றியைப் பத்திரிகைளில் பார்த்த கவிக்குயில் சரோஜினி நாயுடுவும், அன்னி பெசண்ட் அம்மையாரும், நஞ்சுண்டராவ், சீனிவாசன், ராமாராவ்

போன்றவர்களும், அவரவர் பாராட்டுதல்களை தபால் மூலம் அனுப்பியும் நேரில் சந்தித்தும் தெரிவித்துக் கொண்டார்கள்.

பத்திரிகைகளிலே ஒரு இந்தியப் பெண் முதன்முதலாக டாக்டர் பட்டம் பெற்றதைக் கண்ட, விக்டோரியா மருத்துவமனை, பெண்கள் கோஷா மருத்துவமனை, லூதியானா மருத்துவமனை, பஞ்சாப் மாநில மருத்துவத் துறை, கேரளா கள்ளிக்கோட்டை மருத்துவமனை போன்றவை எல்லாம், அழைப்பிதழ்களை அனுப்பி தங்களது மருத்துவமனைக்கு வந்துபணியாற்றுமாறு கேட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்க சிறப்புச் சம்பவமாகும்.

ஆனால், முத்துலட்சுமி படித்த மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் கிஃபோர்டு என்பார், சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள் குழந்தைகள் மருத்துவ மனையில் House Surgeon பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டதற்கு ஏற்ற வாறு, ஓராண்டுக்காலம் முத்துலட்சுமி டாக்டராகப் பணி ஆற்றினார். பின்னர்

எந்த புதுக்கோட்டை அரசர் தனக்குக் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆணை தந்தாரோ, மருத்துவப் படிப்பு படிக்க கல்வி நிதி வழங்கி உதவியளித்தாரோ, அந்த தனது சொந்த ஊருக்கே சென்று, புதுக்கோட்டை மருத் துவமனையில் நன்றிக்கடனாக அவர் பணியாற்றினார். மீண்டும் 1914ம் ஆண்டு முத்துலட்சுமி சென்னை வந்தார்.

## 5. மங்கலம்; மனைமாட்சி:
## நன்கலம் நன் மக்கட்பேறு!

சென்னை மாநகருக்கு மீண்டும் திரும்பிய டாக்டர் முத்துலட்சுமி, ஒரு கிளினிக்கை துவங்கினார்! இதன்

மூலமாக, மாதம் மூன்றாயிரம் ரூபாய்க்கு மேலே, அதுவும், அக்காலத்திலேயே வருமானமாக வந்தது!

முத்துலட்சுமிக்கு வயது 26 ஆகியும் இன்னும் திருமணம் ஆகவில்லையே என்ற கவலை தாயார் சந்திரம்மாளுக்கு மட்டுமே இருந்ததுபோக, இப்போது தந்தையார் நாராயணசாமிக்கும் அந்தப் பாச நோய் பற்றிக் கொண்டது.

மருத்துவக் கல்லூரியில் முத்துலட்சுமி நான்காவது ஆண்டு படித்துக் கொண்டிருக்கும்போதே, அவரது தந்தையார் மகளுக்குரிய மாப்பிள்ளையைத்தேட ஆரம்பித்து விட்டார். இருந்தும் சரியான மணமகன் அமைய வில்லை.

இதற்கிடையே நஞ்சுண்டராவ், 'தனக்குத் தெரிந்த இளைஞர் ஒருவர் இங்கிலாந்துக்குப் போய்ப் படித்து விட்டு வந்துள்ளார். அவருக்கு நமது முத்துலட்சுமியைத் திருமணம் செய்து கொடுக்கலாமே' என்று டாக்டர் நஞ்சுண்ட ராவ் ஆலோசனை கூறிய பிறகே, நாராயண சாமிக்கு மேலும் மாப்பிள்ளை தேடும் படலத்திலே அதிக அக்கறை பிறந்தது.

இந்த யோசனையை டாக்டர் நஞ்சுண்டராவும், நாராயணசாமியும் சேர்ந்து முத்துலட்சுமியும் கலந்து கேட்டு ஆலோசனை செய்தபோது, "நான் சென்னைக்கு வந்திருப்பது படிக்கத்தானே தவிர திருமணம் முடிக்க அல்ல" என்று, பட்டென்று முகத்திலடிக்காத குறையாக பதில் கூறியதைக் கேட்க அவர்கள் அத்துடன் திருமண ஆலோசனையையே மறந்து விட்டார்கள்.

அதுசரி, அப்போது முத்துலட்சுமி படித்துக் கொண்டிருந்தார்; இப்போதுதான் படித்து முடித்து டாக்டராகவும் ஆகிவிட்டாரே; இப்போது கேட்கலாம் அல்லவா? ஆனால்,

முத்துலட்சுமியின் கருத்தறியாமல் மணமகனைப் பார்க்க அவர்கள் முயற்சிக்கவில்லை.

டாக்டர் முத்துலட்சுமி படித்து முடித்தபின் திருமணம் செய்து கொள்வதில்லை என்ற முடிவிலே திட்டவட்டமாக இருந்து விட்டார். இதனை இலைமறை காயைப் போல தெரிந்து கொண்ட பெற்றோர் எப்போது வேளை வாய்க்கும், அவரைக் கேட்கலாம் என்று காத்திருந்தார்கள்

ஆனால், டாக்டர் முத்துலட்சுமியின் கருத்தோ பெற்றோர்களுக்கு நேர் விரோதமாகவே இருந்தது. ஆண்கள், பெண்களை அடிமைப்படுத்தும் சடங்குதான் திருமணம். ஆணுக்குப் பெண் அடிமையாகக் கூடாது. ஒரு பெண் திருமணம் செய்து கொள்கிறாள் என்றால், அவள் தன்னை ஓர் ஆண் வெற்றி பெற விட்டாள்'' என்பதே முத்துலட்சுமியின் கருத்தாக இருந்தது.

மேற்கண்ட இந்த எண்ணம், முத்துலட்சுமியின் மனதில் வேரூன்றி விட்டதால், தன்னைப் பெண் பார்க்க வரும் எந்த ஓர் ஆணையும், தன்னைப் பார்க்கவும், தான் அவனைப் பார்க்கவும் சம்மதம் கொடுக்காமலே அவர் இருந்துவிட்டார்.

மகளின் இந்த முடிவு தாய் தந்தையருக்குப் பெரியதோர் மனக்கவலையாக இருந்தது. பார்க்காத ஆருடமில்லை; ஜாதகத்தை காட்டாத ஜோசியரில்லை; இருந்தும் என்ன செய்வது என்று புரியாமல் பெற்றோர்கள் தவித்தார்கள்.

மூத்தப் பெண்ணான டாக்டருக்குத் திருமணம் நடக்கவில்லை என்றால், இளைய பெண்களை எவர் கேட்பார், மணம் பேசுவார், திருமணம் நடந்தேறும்? மற்ற இரு பெண்கள் கதி என்னவோ என்று மனக்காயமடைந்தார்கள்!

எவ்வளவோ வழிகள் மூலமாக, முத்துலட்சுமிக்கு அறிவுரை வழங்கினார்கள்! எதற்கும் அவர் அசைந்து கொடுக்கவில்லை.

இந்த சமயத்தில்தான், 1913-ம் ஆண்டில் லண்டன் மாநகர் சென்று, மருத்துவக் கல்வி படித்து, எஃப். ஆர். சி. எஸ். அதாவது Fellow of Royal College of Surgen என்ற பட்டம் பெற்று, விசாகப்பட்டினத்தில் உள்ள கிங் ஜார்ஜ் மருத்துவமனையில் சுந்தரரெட்டி என்ற ஒருவர் பணியாற்றி வந்தார்.

அந்த டாக்டர், முத்துலட்சுமி முதல் பெண் டாக்டராக தேர்வு பெற்று பெருமையேற்றதையும், தனியாக ஒரு கிளினிக் வைத்து நடத்துவதையும் கேள்விப்பட்ட அந்த சுந்தரரெட்டி; டாக்டர், முத்துலட்சுமியைத் தான் திருமணம் செய்து கொள்வதாகக் கருத்தறிவித்தார்!

யார் இந்த சுந்தர ரெட்டி? ஆந்திர மாநிலத்தவரா? தமிழரா? என்று கேட்க ஆர்வம் தோன்றக்கூடும் அல்லவா? இதோ விவரம்:

சுந்தர ரெட்டி தமிழகத்திலே உள்ள தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர், தமிழகத்தின் முன்னாள் முதல்வராக இருந்த சுப்பராய ரெட்டியார் என்பவரின் தமக்கை மகன்தான் இந்த சுந்தர ரெட்டி.

அவர் தனது உறவு முறைகளுடன் கோபித்துக்கொண்டு பெங்களூர் சென்றார். அங்கு கடினமான உழைப்புகளில் ஈடுபட்டு, அங்கிருந்து லண்டனுக்குச் சென்று F.R.C.S. என்ற மருத்துவத் துறைபட்டத்தைப் பெற்றுத் திரும்பி வந்தவர் அந்த சுந்தர ரெட்டி!

அவர் எடுப்பான தோற்றம் உடையவர்! கம்பீரமான துணிவும், அறிவாற்றலும் பழகும் தன்மையுள்ள மென்மை

யான சுபாவமும் உள்ளவர்! இனிமையாகப் பேசி, எதையும் நிறைவேற்றிக் கொள்ளும் தன்மையுடையவர்.

'எனக்கு நீங்கள் உங்களது பெண்ணைத் திருமணம் செய்து தருவீர்களேயானால்; நானும் உங்களது பிள்ளைகளிலே ஒருவனாக உங்களுடனேயே தங்கி விடுவேன் என்று நயம்பட எடுத்துச் சொன்னது, முத்துலட்சுமியின் அம்மாவைக் கவர்வதாக இருந்தது. ஆனால், முத்துலட்சுமியை, சரிப்படுத்துவது எப்படி?

இதற்கேற்ப சுந்தரரெட்டியை முதன் முதலாகச் சந்திக்க முத்துலட்சுமி அறவே மறுத்துவிட்டார். அவரது பெற்றோர்கள், அவர் நலன் நாடிடும் வற்புறுத்தல்களால் அந்த டாக்டரம்மாவின் மனம் ஒருவாறு தளர்ந்தது? அதனால், டாக்டரம்மாவின் காதல் மனம் கனிந்தது.

ஒருமுறை, முத்துலட்சுமி முதன்முதலாக சுந்தரரெட்டியாரை மணமகன் என்ற முறையில் சந்தித்தார். தொடர்ந்து சில சந்திப்புகள் நடந்தன. ஒரு சந்திப்பின் போது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியிடம் பேசும்போது;

'உங்களுக்குச் சமமான மரியாதையை எனக்கு நீங்கள் வழங்க வேண்டும். என்னுடைய விருப்பங்கள் எதுவானாலும், அதற்கு நீங்கள் குறுக்கே நிற்கக் கூடாது'' என்ற நிபந்தனைகளை டாக்டர் முத்துலட்சுமி விதித்தார்! ரெட்டியார் அதற்குச் சம்மதித்தார்.

இருவருக்கும் திருமணம் உறுதி செய்யப்பட்டதன் அடையாளமாக, 1913-ம் ஆண்டு மார்ச் மாதத்தில், தன்னுடைய வைர மோதிரத்தை ரெட்டியார் முத்துலட்சுமிக்கு அணிவித்தார்.

டாக்டர் முத்துலட்சுமி, டாக்டர் சுந்தரரெட்டி திருமணம், 1914-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இனிது

நடைபெற்றது. மருத்துவத்துறை வல்லுநர்கள் எல்லாம் திருமணத்திற்கு வந்து வாழ்த்துக் கூறினார்கள்.

திருமணம் முடிந்த பின்பும் கூட, டாக்டர் சுந்தர ரெட்டியாரின் மருத்துவப் பணி விசாகப்பட்டினத்திலும், டாக்டர் முத்துலட்சுமியின் மருத்துவப்பணி சென்னை மாநகரிலுமாக நடைபெற்று வந்தது.

சுந்தர ரெட்டியார் மேல் படிப்பிற்காக, முன்பு ரூபாய் இருபதினாயிரம் கடன் பெற்றிருந்தார். அந்தக் கடன் அவருக்குப் பெரும் குழப்பத்தையும், வேதனையையும் தந்தது. கடன் கொடுத்தவர்கள் அவரை உடனே திருப்பித் தர வேண்டும் என்று நெருக்கினார்கள்.

மாதம் நூற்றைம்பது ரூபாய் மட்டுமே வருமானம் உள்ள சுந்தரரெட்டியால் அவ்வளவு பெரும் தொகையைக் கொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பதைப் பார்த்த முத்துலட்சுமி மனம் வேதனையடைந்தது.

இந்த இக்கட்டான சூழ்நிலையை நன்குணர்ந்த நாராயணசாமி, புதுக்கோட்டை சென்று அங்கே உள்ள மருத்துவத்துறை தலைமை மருத்துவர் வேலையை, புதுக் கோட்டை ராஜாவிடம் கூறி ரெட்டியாருக்கு வாங்கிக் கொடுத்தார்.

அல்லும் பகலும் சுந்தரரெட்டியார் தனது பணியில் கடுமையாக உழைத்தார். நோயாளிகளிடமும், அக்கம் பக்கம் உள்ள பெரும்பான்மையான மக்களிடமும் அன்பும், பண்பும் தவழ நடந்து கொண்டு, கைராசியான ஒரு டாக்டர் என்ற பெயரையும் பெற்று விட்டார்.

டாக்டர் சுந்தர ரெட்டியாரது உழைப்பும், உண்மைப் பணியும் வீணாகவில்லை. மாதம் மூவாயிரம் ரூபாய் அளவுக்கு அவருக்கு வருமானம் பெற்றதால், தனது கடன்

களை எல்லாம் திருப்பிக் கொடுத்துவிட்டு, மன நிறைவுடன் வாழ்ந்தார்.

சென்னை கல்லூரியில் தனது தம்பிக்காகவும் மற்ற தங்கைகள் கல்விக்காகவும், டாக்டர் முத்துலட்சுமி சென்னையிலேயே தங்கும் அவசியம் ஏற்பட்டது. ஆனால், டாக்டர், சுந்தர ரெட்டியார் சென்னைக்கு வருவதும், டாக்டர் முத்துலட்சுமி புதுக் கோட்டைக்குப் போய் கணவனைக் காண்பதுமாகக் காலம் தள்ளி வந்தார்கள்.

கர்ப்பவதியான முத்துலட்சுமிக்கு முதல் பிரசவ நாள் வந்தது; அவர், தனது உடல் பலவீனம் கண்டு அஞ்சினார். 23-1-1914ம் ஆண்டன்று முதல் ஆண் குழந்தை பிறந்தது.

பிரசவத்தின்போது, முத்துலட்சுமி உயிர் பிழைப்பதே கடினம் என்ற இக்கட்டான நிலை இருந்தது. ஆற்காட்டு சகோதரர்கள் என்று இன்றும் தமிழ் நாட்டவரால் மரியாதையோடும், மதிப்போடும், புகழப்படும் இணையவரான டாக்டர் ஏ. லட்சுமண சுவாமி முதலியார் அவர்கள் தான்; டாக்டர் முத்துலட்சுமிக்கு பெரிதும் முயன்று பிரசவத்தை எளிதாக்கி, சுலபமாக ஈன்றெடுக்கச் சிகிச்சை செய்தார்!

முத்துலட்சுமி அம்மையாருக்கு ஏழு நாட்கள் தூக்கமில்லை; ஒரே மயக்க நிலை; தூக்கம் வரும்போது மயக்க மருந்தைக் கொடுத்தே தூங்க வைப்பார்கள் சில நாட்கள் அவருக்கு நினைவு தடுமாறியதும் உண்டு.

இவ்வளவு கஷ்டங்களையும், வேதனைகளையும், உபாதைகளையும், உருவாக்கிப் பிறந்த குழந்தையின் பெயர் என்ன தெரியுமா? ராம்மோகன் என்பதே அக் குழந்தையின் பெயர்!

அந்த குழந்தை வளர்ந்து, கல்விகற்று, மணமாகி, மக்கட்பேறுகளைப் பெற்று, இன்று டில்லியில் உள்ள

டவர் பினானின் குழு இயக்குநராகப் பணியாற்றுகிறார். அந்த குழந்தை ராம் மோகன் என்று கேட்கும்போது, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அனுபவித்த பிரசவ வேதனைகளும், துன்பங்களும் டாக்டர் எ.எல். முதலியார் அக்கறையோடு தந்த சிகிச்சை முறைகளும் வீண்போக வில்லை அல்லவா?

டாக்டர் முத்துலட்சுமியின் முதல் குழந்தைப் பிரசவத் திற்குப் பிறகு உடல் நலம் தேறிட நல்ல ஓய்வும்-போஷாக் கும் தேவை என்பதால், கணவன் சுந்தரரெட்டி பணியாற் றும் தனது சொந்த ஊரான புதுக்கோட்டை நகருக்கு அவர் சென்றார்.

அப்போது, அந்த நகர் அரசு மருத்துவமனையில் நல்ல பெண் மருத்துவர் இல்லையென்பதால், குழந்தை ராம் மோகனைத் தனது தம்பி ராமையா மனைவியிடமும், தங்கை சுந்தரம்மாளிடமும் பாதுகாப்பாக விட்டு விட்டு டாக்டர் முத்துலட்சுமி பொதுப்பணியில், மருத்துவப் பணியில் ஈடுபட்டார்.

சுந்தர ரெட்டியாருடைய நண்பரின் உதவியால் சென்னை மருத்துவக் கல்லூரியில் காலியாக இருந்த உதவிப் பேராசிரியர் பணியை அவர் ஏற்றுக் கொண்டார். இந்தப் பணிக்கு மாதவருமானம் வெறும் இருநூற்றைம்பது ரூபாய் என்று தெரிந்தும் கூட, நிறைய வருமானம் வரும் புதுக்கோட்டை நகர் மருத்துவப் பணியை விட்டுவிட்டார். காரணம், மருத்துவப் பணியின் நுட்பங்களை மேலும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற பேரவாதான்!

கணவன் சென்னை வந்து பணி செய்வதற்கேற்ப, டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரும் சென்னைக்கு வந்து தனியாக ஒரு கிளினிக் அலுவலகம் வைத்து, மாதம் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் வர வழிசெய்து கொண்டார். சிறுவன் இராம் மோகனுக்கு நான்கு வயது வந்ததும், அவனைப் பெற்றோர் பள்ளியில் சேர்த்தார்கள்.

டாக்டர் வரதப்ப நாயுடு என்பவர் ஓர் அநாதைக் குழந்தை இல்லம் நடத்தினார். அங்குள்ள குழந்தை களுக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றில் போதிய வசதி இல்லை என்பதைக் கண்ட டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், மனம் நொந்து வருந்தி, அந்த அனாதை இல்லப் பாதுகாப்புக் குழுவிற்கு அறிக்கை எழுதி, தேவை யான வசதிகளைப் பெற்றுத் தந்தார்.

சுந்தர ரெட்டியார் வருமானம் 250 ரூபாயும், அம்மை யாரது வருமானமும் குடும்பம் நடத்தப் போதவில்லை. ஏனென்றால், அம்மையார் தம்பி, தங்கைகள், மகன் கல்விச் செலவு நெருக்கடிகள் வேறு. இந்த நேரத்தில் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு நோய் நொடித் தாக்குதல் களும் ஏற்பட்டு விட்டன.

1919ம் ஆண்டில் டாக்டர் முத்துலட்சுமி அம்மை யாருக்கு இரண்டாவது குழந்தையும் பிறந்தது. ஏ. எல். முதலியார்தான் இக்குழந்தைக்கும் பிரசவ வழிமுறை களைப் பார்த்தார்.

இந்த இரண்டாவது குழந்தைதான் டாக்டர் கிருஷ்ண மூர்த்தி என்பவர். இவர் தற்போது சென்னை அடையாறு பகுதியில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையை திறம்பட நடத்தி வருகிறார்.

அம்மையாரது உடன்பிறந்த ஒரே தம்பியான ராமையா உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து பணியாற்றி வருபவர் ஆவார். தங்கை நல்லமுத்து படித்துப் பட்டம் பெற்று, சென்னை ராணி மேரிக் கல்லூரி யில் விரிவுரையாளராகப் பொறுப்பேற்றார். மற்றொரு சகோதரியான சுந்தரம்மாள் வீட்டுப் பொறுப்பாளராகவே இருந்து விட்டார். இருந்தாலும், சுந்தரம்மாள் அக்காள்

பணியாற்றும் ராணிமேரிக் கல்லூரியிலேயே சேர்ந்து படித்து வந்தார்.

இந்த வேளையில் அவர் உடல் நலம் குன்றினார்! டாக்டர்கள் பரிசோதனை செய்தார்கள்! அது ஹிஸ்டீரியா வகையைச் சேர்ந்த ஒரு நோய் என்றும், திருமணமானால் சரியாகிவிடும் என்றும் டாக்டர்கள் கூறிவிட்டார்கள்

அதனால், சுந்தரம்மாளுக்கும் மராட்டிய இளைஞர் ஒருவருக்கும் திருமணம் நடந்தது. மணமகன் சிற்ப வேலைகளைச் செய்வதில் வல்லவர்! கவியரசர் ரவீந்திர நாத் தாகூரின் மாணவர்! லண்டன் மாநகரில் சிற்ப வல்லுந ராகப் பணி புரிபவர்! அவர்தான் சுந்தரம்மாளை மணம் புரிந்து கொண்டார்.

திருமணம் முடிந்த பின்பும் கூட சுந்தரம்மாளைப் புற்று நோய் மீண்டும் பற்றிக் கொண்டது. இந்த நேரத்தில் டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் தாயாரான சந்திரம் மாள் 1919-ம் ஆண்டில் மரணமடைந்தார்.

சந்திரம்மாள் சடங்குகள் எல்லாம் முடிந்த பிறகு, சுந்தரம்மாளை கல்கத்தா நகரில் உள்ள டாக்டர் போஸ் நர்சிங் மருத்துவமனைக்கு அனுப்பி, அதற்கான சிறப்பு சிகிச்சைகளைச் செய்திட டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் ஏற்பாடு செய்தார்.

சுந்தரம்மாள் நோயிற்காக டாக்டர் முத்துலட்சுமி பெரும் பொருள் செலவு செய்தார். இருந்தும், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 1923-ம் ஆண்டில் சுந்தரம்மாள் புற்றுநோய் வியாதிக்குப் பலியானார்.

தாயார் இறந்தார்! தங்கையும் இறந்தார்! இந்த வேதனை, மன உளைச்சல்கள், குடும்ப சூழ்நிலைகள் இவற்றின் கஷ்டங்களைச் சமாளிக்க அல்லது மீள முடியாத நிலையில், தினந்தோறும் நான்கு 'மர்பியா' ஊசிகளைப் போட்டுக் கொண்டார் முத்துலட்சுமி!

## ௬. பெண்கள் உரிமைக்காக பாரீஸ் மாநாட்டில் சபதம்!

"டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் குடும்பச் சூழ் நிலை மேற்கண்டவாறு இருந்த காலத்தில், இந்திய சுதந் திரத்திற்காக அயராது பாடுபட்டு வந்த காந்தியடிகள், 'நமது பெண்களை நாம் அடிமைப்படுத்தி வைத்துக் கொடுமை செய்யும்போது, அந்நியர் நம்நாட்டை அடிமைப் படுத்திக் கொடுமை செய்வதாக எவ்வாறு நம் தலை நிமிர்ந்து நின்று குறைகூற முடியும்?" என்று நாட்டு மக்கள் இடையே கேட்டார்!

மகாத்மாவின் இந்த கேள்வி டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரைச் சற்று சிந்திக்க வைத்தது, அதே நேரத்தில் 'நமக்கும் சிறகு இருக்கிறது; பறக்கத் தொடங்குவோம்' என்று பெண்கள் சார்பாகவும் சில முற்போக்குச் சிந்தனை யுள்ளம் படைத்த பெண்களும் நாட்டில் பரவலாகப் பேச ஆரம்பித்தார்கள்.

பெண்களுக்குப் பெண்களே மருத்துவம் பார்க்க வேண்டும்; ஆண்கள் பார்க்கக் கூடாது' என்ற உரிமைக் குரலும் ஓர் பக்கம் எழுந்தது. மருத்துவக் கல்வியில் பயிற்சியும், தேர்ச்சியும் பெற்ற டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியாரும் பெண்களின் இந்த உரிமைக்குரலை வர வேற்றார்.

இவ்வாறு பெண்கள் உரிமைக்குரல் எழுப்பக் காரணம், 1875-ம் ஆண்டில் ஆங்கிலேய அரசப் பிரதிநிதியாக இருந்த திருமதி டப்ரின் என்பவரே! டாக்டர் முத்துலட்சுமி யைப் போன்ற கிறித்துவர் அல்லாத இந்து பெண்கள் மருத்துவத் துறையில் ஈடுபட முன் வந்தார்கள் என்றால்,

அதற்கும் அந்த திருமதி டப்ரின் பெண்களுக்காக எழுப்பிய உரிமைக் குரலேயாகும்.

மருத்துவத் துறையில் பெண்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற குரல், 1883-ம் ஆண்டு முதன் முதலாக தேசிய காங்கிரஸ் மகாசபை துவக்கப்பட்டதுபோது, தாதபாய் நௌரோஜி என்பவர் ஆங்கிலேய ஆட்சிக்கு மனு கொடுத்துக் கோரிக்கை எழுப்பினார்!

அதற்குப் பிறகு, 'தேசிய வைத்திய சங்கம்' என்றோர் அமைப்பினை, நௌரோஜி மனுவின் எதிரொலியாக, திருமதி டப்ரின் ஏற்படுத்தினார். இந்த அமைப்பின் வளர்ச்சிக்காக அந்த அம்மையாரே முன்நின்று நிதியும் திரட்டினார்.

திருமதி டப்ரின் நிறுவிய சங்கத்தின் பயனாக, டில்லியில் லேடி ஹாரிட்டிங்ஸ் மருத்துவப் பள்ளியும், ஆக்ரா நகரில் ஒரு மருத்துவப் பயிற்சிக் கல்வி நிறுவனமும், சென்னையில் லேடி வில்லிங்டன் மருத்துவக் கல்வி நிலையமும் துவங்கப்பட்டு, அவற்றில் பெண்களுக்கு மட்டுமே மருத்துவப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

இந்தப் பணிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஆரம்பமானது என்றாலும், இது பெண்கள் வாழ்க்கைக்குரிய ஒரு தொழிலாக அமையவில்லை என்பது தான் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், இந்தப் பள்ளிகளில் பயிற்சி பெறுவோர் தங்களுக்கே பயன்பட்டுக் கொள்ளவும், மற்ற பெண்கள் நோய்வாய்ப்படுவார்களானால் அவர்களுக்குப் பயன்படவு மான ஓர் அவசிய அறிவுரையாகவும் மட்டுமே இருந்தது எனலாம்.

இந்தச் சமுதாயத்தில் பெண்களுக்குரிய சமூக நிலை தான், இந்திய மகளிர் மருத்துவக் கல்வியைப் பெற்றாக

வேண்டும் என்ற உணர்வுக்குரிய தூண்டு கோலாக விளங்கியது.

சென்னை மாநகரின் மருத்துவத் துறை சர்ஜன் ஜென ரலாக 1872-ம் ஆண்டில் பணியாற்றிய டாக்டர் பால்போர் என்பவர், செவிலியர்களுக்கான மருத்துவ நிலையத்தில் பெண்களுக்கு இரண்டாண்டு பயிற்சியும், ஆண்களுக்கான மருத்துவக் கல்லூரிகளில் பெண்களுக்கான தனி வகுப்பும் துவக்கப்பட வேண்டும் என்று ஆங்கில அரசுக்கு வேண்டு கோள் விடுத்தார்.

ஆனால், அன்றைய கல்வித் துறையின் பிற ஆங்கில அதிகாரிகள், காலம் அதற்குப் பக்குவப்படவில்லை என்ற காரணம் காட்டி நிறுத்தி விட்டார்கள்.

சர்ஜன் ஜெனரல் பால்போர், இரண்டாண்டுகள் கழித்து மீண்டும் அதே வேண்டுகோளை அரசு அதிகாரி கள் முன் வைத்தார். இந்தக் கருத்தை அப்போதைய சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வராகப் பணி யாற்றிய டாக்டர் ஃபரினல் என்பவர், தீவிரமான தனது ஆதரவைத் தெரிவித்தார். இதற்குப் பிறகு தான் 1875-ம் ஆண்டில் முதன் முதலாக ஆண்கள் மருத்துவக் கல்லூரி யில் நான்கு பெண்களை மட்டுமே சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்.

மருத்துவக் கல்லூரிகளில் பெண்களுக்கும் இடம் என்ற திட்டம் முதன் முதலாக உருவானது, இந்தியாவிலேயே சென்னை மாநகரம்தான் என்பது குறிப்பிடத்தக்க நிர்வாக சம்பவமாகும்.

இவ்வாறு உருவான திட்டத்தினால், வங்காள மாநிலத்தைச் சேர்ந்த பெண்களும் இங்கு மருத்துவம் கற்றிட வந்தார்கள் அவ்வாறு வந்தவர்களில், புகழ் பெற்ற விஞ்ஞானி ஜகதீச சந்திரபோஸ் மனைவி திருமதி ஓபாகம் ஒருவராவார்.

கல்கத்தா நகரில், இதற்காக ஒரு கிளர்ச்சியே உருவானது. அதனால், 1885-ம் ஆண்டில் கல்கத்தா மருத்துவக் கல்லூரியிலும் பெண்கள் இடம் பெற்றார்கள்.

இதுபோலவே, பம்பாயில் உள்ள கிராண்ட் மருத்துவக் கல்லூரியிலும், எல்லா வகுப்பினரையும் சேர்ந்த பதினேழு பெண்களை அக்கல்லூரி நிர்வாகம் சேர்த்து கொண்டது.

ஆக்ரா நகரில் சிவில் சர்ஜனாக இருந்த டாக்டர் ஹில்சன் என்பவர், ஆக்ரா பெண்கள் மருத்துவமனையில் உதவியாளர்களாகப் பெண்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற ஓர் திட்டத்தை ஆங்கிலேய ஆட்சியிடம் கொடுத்தார்.

ஆண்களுக்காக உள்ள கல்வி வகுப்புக்களிலேயே பெண்களுக்கும் பயிற்சி வழங்கப்படலாம்; அதே நேரத்தில் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டும் என்பதும் அவரது யோசனையாகும்.

அப்போதைய ஆங்கில அரசு டாக்டர் ஹில்சனுடைய திட்டத்தை ஏற்றுக் கொண்டது. அதனால் 1885-ம் ஆண்டில் புதிய வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. இருபத்தோரு பெண்கள் மேற்கண்ட திட்டத்தின்படி சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

இதே திட்டம் லாகூர் நகராட்சி சார்பாக 1896-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. மருத்துவத் துறையில் பெண்கள் அப்போது சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

தமிழ் நாட்டிலே, வடாற்காடு மாவட்டத்திலே உள்ள வேலூர் நகரில், 1918-ம் ஆண்டில், டாக்டர் இடாஸ் கட்டர் என்பவரால் மருத்துவக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இவர் ஓர் அமெரிக்கர் ஆவார்.

இப்படிப்பட்ட மருத்துவத்துறை சூழ்நிலைகள் ஆங்காங்கே உருவாகிக் கொண்டிருக்கும் நேரத்திலேதான்

டாக்டர் முத்துலட்சுமிக்கும் மருத்துவக் கல்வியில் ஊக்க மும், உற்சாகமும் அபரிமிதமாக வளர்ந்தது.

டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் மாத்துவத் துறை அறிவாற்றலையும், ஊக்கத்தையும் உற்சாகத்தை யும் கண்ட இந்திய அரசு, குழந்தைகள் மகளிர் நோய்களுக் கான ஆராய்ச்சிக் கல்விக்காக, அம்மையாரை லண்டன் மாநகருக்கு அனுப்பி வைக்க எண்ணியது.

சென்னை மாகாண அன்றைய முதல்வராக இருந்த நீதிக்கட்சியைச் சேர்ந்த முதல்வர் பனகல்ராஜா, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி லண்டன் போவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

முத்துலட்சுமி அம்மையார் பனகல் அரசின் குடும்ப டாக்டர். அதனால் அம்மையாரது அறிவாற்றலை முதல்வர் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார். அதனால், அவர் அந்த அம்மையாருக்குப் பரிந்துரைத்தார்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மைாருக்கு மக்கள் இடையே வளர்ந்துவரும் மதிப்பும், மரியாதையும், செல் வாக்கும் கண்டு, இந்த நேரத்தில் மேல் நாடு சென்றால், அவையெலாம் குன்றிவிடுமோ என்ற அச்சம் அம்மை யாருக்கு இருந்தது. அதனால் லண்டன் போகத் தயங்கினார்.

ஆனால், மருத்துவத்துறை நுணுக்கங்களை நுட்பமாகப் புரிந்துகொள்ள இந்த பயணம் பயன்படும், தயங்காதீர்கள் என்று அம்மையாருக்கு நெருக்கமானவர்கள் அன்புரை கூறினார்கள்.

அதே நேரத்தில் டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் கணவரும் மேல்நாடு சென்று, மேலும் மருத்துவத்துறை அனுபவங்கள் பெறவேண்டும் என்று விரும்பினார். சென்னை மருத்துவத்துறை அவருக்கு ஓராண்டு ஊதியத் தோடு விடுமுறையும் தந்து உதவியது. அதனால், கணவ

ரும் விரும்புவதால், லண்டன் பட்டணம் போக அவர் எல்லா முடிவுகளையும் மேற்கொண்டார்!

1925-ம் ஆண்டு, ஜூலை மாதத்தில், டாக்டர் முத்து லட்சுமி, தனது சிற்றப்பா மகள் சுப்புலட்சுமி, குழந்தைகள் இருவரோடும். பம்பாய் நகரிலே இருந்து கப்பலில் லண்டனுக்குப் புறப்பட்டார்கள்.

ஒரு பிரிட்டிஷ் துறைமுகத்தில் கப்பலை விட்டு இறங்கி இவர்கள் விக்டோரிய நிலையத்தைச் சென்றடைந்த போது, முன் கூட்டியே தாங்கள் வருவதைக் கடிதம் மூலம் தெரிவித்திருந்த நண்பர்கள் யாரையும் அங்கே காண வில்லை.

இவர்கள் மிகக் கால தாமதமாக வந்தார்கள், ஆத லால், ஒரு வேளை முத்துலட்சுமி வரவில்லையோ என்று எண்ணி, காத்திருந்தவர்கள் எல்லாரும் போய்விட்டார்கள்.

இந்திய அரசின் உதவியால், இலண்டன் பொருளா தாரப் பள்ளியில் அப்போது படித்துக் கொண்டிருந்த அம்மையாரின் சகோதரி நல்லமுத்துவைச் சென்று சந்தித் தார்கள். நல்லமுத்துவின் மாணவர் விடுதியில் முத்து லட்சுமி குழுவினர் தங்கப் போதிய வசதிகள் இல்லை. அதனால், லண்டனுக்கு அருகே வெஸ்ட் ஹாம் பட்டில், இந்தியரால் நடத்தப்பட்டு வந்த விடுதி ஒன்றில் அம்மை யாருட்பட அனைவரும் தங்கினார்கள்.

இலண்டனிலே உள்ள செல்சியா மருத்துவமனையில் தன்னுடைய பயிற்சியை டாக்டர் முத்துலட்சுமி தொடர்ந் தார். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் வரும் நோய் களைப் பற்றி அவர் நடத்திய ஆராய்ச்சி, மேனாட்டு மேதைகளையே வியக்க வைத்தன!

இந்த நேரத்தில், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் உடன்பிறந்தவரும், உயர்நீதிமன்ற வழக்குரைஞரான

இருந்தவருமான ராமையா, நோய்வாய்ப்பட்டு, இரண்டு நாட்களுக்குள் இறந்து போனார் என்ற செய்தி அம்மையாருக்கு வந்தது! அன்பு தம்பி மரணம் கண்டு அவர் மன வேதனைப்பட்டார்.

உடனே சென்னை திரும்ப எண்ணிய டாக்டர், இந்திய ஹை கமிஷனரைச் சந்தித்தார்! அந்த அதிகாரி கூறிய அறிவுரையால் பயணத்தை ரத்து செய்து, மேலால் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

அந்த நேரத்தில் பிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிஸ் நகரில் உலகப் பெண்கள் மாநாடு நடந்தது. ஏறக்குறைய 42 நாடுகளில் இருந்து வந்த பெண்கள் அந்த மாநாட்டில் பங்கேற்றார்கள்.

இந்தியப் பெண்கள் கழகத்தின் சார்பில் சென்று அந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு, திருமதி கசின்ஸ் என்பவரும், திருமதி ஜினராஜதாசாவும் டாக்டர் முத்து லட்சுமியைக் கேட்டுக் கொண்டார்கள்.

சென்னையிலே வந்திருந்த ஆசிரியையான திருமதி பேரி என்பவர், பிரெஞ்சு மொழியறிவு பெற டாக்டர் முத்துலட்சுமிக்கு உதவியாக இருந்தார்.

பாரிஸ் மாநகரில் நடந்த அந்த பெண்கள் மாநாட்டில் சென்று, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார். அவருடைய பேச்சில் அவர் குறிப்பிட்டதாவது:

"பெண்களைச் சக்தி என்பார்கள். கடவுளே சக்தி இல்லாமல் இருக்க முடியாது; இயங்க முடியாது, என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்தான் அர்த்தநாரீஸ்வரர்! இராமாயணத்தில் ராமர் சீதைக்குத்தான் முதலிடம் தந்தார்! அதனால் அவரை "சீதாராமன்" என்று நாம்

குறிக்கிறோமே தவிர, 'ராம் சீதா' என்று குறிப்பிடுவது இல்லை.

இந்தியப் பெண்கள் பெற்றிருக்கிற, பெறவேண்டிய திருக்கிற உரிமைகள் ஏராளமாக இருக்கின்றன.

இந்த நாட்டில் இல்லாத குழந்தை மணத்தின் கொடுமை, பர்தா முறை ஆகியவை எங்கள் நாட்டிலும் இல்லாமல் ஆக்கப் பாடுபடுவேன் என்பதைச் சபதமாக இங்கே ஏற்கின்றேன். இங்கே உள்ளதுபோல் கணவனைப் பெண்களே தேர்ந்தெடுக்கும் உரிமை, இளம் பெண்கள் விதவா மணம் செய்யும் அனுமதி ஆகியவை இந்திய நாட்டுப் பெண்களும் விரைவில் பெறும் முயற்சியில் ஈடு பட்டிருக்கிறேன்! என்று அவர் குறிப்பிட்டார்.

டாக்டர் முத்துலட்சுமி உலகப் பெண்கள் மாநாட்டில் பேசிய பேச்சினை, அந்த மாநாட்டில் கூடியிருந்த எல்லா நாட்டுப் பெண்களும் மனப்பூர்வமாக வாய்விட்டுப் போற்றினார்கள்; புகழ்ந்தார்கள்!

டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் அழகிய, எளிய ஆங்கில நடையழகை மாநாட்டிற்கு வந்திருந்த ஐரோப் பியர் எல்லாம் வானளாவப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித் தார்கள்!

டாக்டர் அம்மையார், இவ்வாறு பெறுவதற்குரிய புகழையெல்லாம் பெற்று தனது தாய் நாடான தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்தார்.

மகள் தந்தைக்கு ஆற்றும் உதவிபோல, பாரிஸ் மாநகர உலகப் பெண்களது அவையிலே அரிய புகழ்பெறு வதற்குக் காரணமாக இருந்த டாக்டர் முத்துலட்சுமியின் தந்தையாரான நாராயணசாமி, 1940-ம் ஆண்டு மரண மானார்.

தாய், தங்கை, தம்பி, தந்தை அனைவரையும் இழந்து விட்டோமே என்ற ஆற்றமுடியாத வருத்தத்தால், டாக்டர் முத்துலட்சுமி மனம் தளர்ந்து சோகமே உருவானார்.

## 7. சட்ட சபையில் முதல் பெண் உறுப்பினர்!

பாரிஸ் நகரில் நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டில் பெண் உரிமைகளுக்காகப் போராடுவேன் என்று சபதம் செய்துவிட்டுத் தமிழ்நாடு திரும்பிய டாக்டர் முத்துலட்சுமி முதன்முதலாகத் தேவதாசி ஒழிப்புத் திட்டத்தில் ஈடுபட்டுப் பணியாற்ற ஆரம்பித்தார்.

தமிழக, ஆந்திர மாநிலங்களில் ஆண்டவன் சேவைக்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட பெண்கள் தேவரடியார்கள் என்றும், தேவதாசிகள் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

இந்த தேவதாசிகள் பணிகள் என்னவென்றால், கோயில்களில் காலையிலும், மாலையிலும் நடனம் ஆடுவதும் பாடுவதும் ஆகும். இவர்கள் ஆடல் பாடல்களில் ஈடுபட்டக் கலைக்குடும்பம். அதனால், இவர்களை அந்தந்த நகரிலுள்ள பணக்காரர்களும், முக்கியப் பிரமுகர்களும் தங்களது வீட்டு விழாக்களில் ஆடவும், பாடவும் அனுமதித்தார்கள். சில உயர் வகுப்புப் பெண்களும் இறைவன் தொண்டு என்ற பெயரில் இதில் ஈடுபடுத்தப்பட்டு வந்தார்கள்.

அழகும், இளமையும், கலைஞானமும் உள்ள பெண்களுக்குப் பொட்டு கட்டி விட்டு விடுவது தேவதாசிகள் குடும்பப் பழக்க வழக்கமாகும். ஊர் செல்வர்க்குப்படைத்த

செல்வச் சீமான்கள், இந்தப் பெண்களை தங்களது காமக் களியாட்டத்திற்கு வைப்பு முறையிலும், பணம் புழக்க வகையிலும் பயன்படுத்தி வந்தார்கள்.

கோயில் உள்ள இடங்களிலே எல்லாம், மாடவீதிகளில் இந்த ஆடல் பாடல் பெண்கள் குடியிருப்பார்கள் இதனால், கோயில் தரத்திற்கு ஏற்றவாறு இந்தக் குடும்பங்களது எண்ணிக்கை இருக்கும். இந்த வழக்கம் விஜய நகர மன்னர் கிருஷ்ண தேவராயர் காலத்தில் அதிகமாகக் காணப்பட்டது. அவர் தெலுங்கு தேவதாசிகளை தமிழகக் கோயில்களுக்கு இறக்குமதி செய்தார்!

முஸ்லிம்கள் இந்தியாவை ஆட்சி செய்யும் காலத்தில் இந்த தேவதாசிகள் புழக்கங்கள் குறைந்ததே தவிர, முற்றிலுமாக அற்றுப் போகவில்லை.

முஸ்லிம் ஆட்சிகள் அகன்ற பிறகு, வெள்ளைக்காரர்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகும் கூட, தேவதாசிகள் முறை நீடித்தே வந்தது.

கோயில்கள் பெயரால் பொட்டுக் கட்டிவிடப்பட்ட பெண்கள், பலரின் பருவப் பசி நீக்கும் பாவைகளாகப் பயன்பட்டதால், அந்தந்தப் பகுதிகளிலே ஒழுக்கக்கேடுகள் பெருகின. இதனால் பல நல்ல குடும்பங்களும் வறுமையில் சிக்கிப் பாழாகின. இந்த ஒழுக்கக் கேடுகளை ஊர் மக்கள் எல்லாம் அங்கங்கே கூடி எதிர்க்க ஆரம்பித்தார்கள்.

1930-ம் ஆண்டு முதல் இந்த தேவதாசி முறைகளைச் சீர்திருத்தவாதிகள் அங்கங்கே கட்டுப்பாட்டோடு எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்தார்கள். இதனால், பெண்ணினத்துக்கே பெரும் அவமானமும் ஒழுக்கக் கேடுகளும் ஊருக்குஊர் கோயில் பெயரால் நடந்துவருவதை அவர்கள் சுட்டிக் காட்டி தேவதாசிகள் ஒழிப்பு என்ற திட்டத்தை ஓர் இயக்கமாக உருவாக்கி எதிர்த்து வந்தார்கள்.

அந்த தேவதாசி ஒழிப்புக் கொள்கையில், முன் வரிசையில் முதல் பெண்ணாக நின்று அந்த இயக்கத்துக்கு ஆதரவாகப் பாடுபட்டார் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்.

அதே நேரத்தில் பால்ய விவாகம் என்ற பெயரால் இளம் வயதிலேயே திருமணத்தை நடத்தி, அவர்கள் கணவன் இறந்த பிறகும், இருக்கும்போதும், கணவன்மார்கள் இளம் பெண்களைக் கைவிட்டு விட்டு வேறு பெண்களுடன் ஈடுபட்டு, முதல் மனைவியை விபச்சாரத்திற்கு ஆளாக்குவதுமான கொடுமைகள் நடப்பதையும் டாக்டர் முத்துலட்சுமி கண்டார்!

அதனால், தேவதாசிகளை ஒழிப்பது மட்டும்போதாது, பால்ய விவாகக் கொடுமைகளையும் சேர்த்தே ஒழிக்க வேண்டும் என்ற முடிவுக்கு டாக்டர் முத்துலட்சுமி வந்தார். பூவிழந்து, பொட்டிழந்து விதவைக் கோலமாகக் கிடக்கும் பெண்களுக்கு விதவை மணம் செய்து வைக்க வேண்டும். அப்போதுதான் பெண்ணினம் பெருமை பெறும்; பெண்கள் உரிமையோடு வாழ முடியும்; மானமும் மரியாதையும் பெண்களுக்கு உருவாகும் என்பதையெலாம் சிந்தித்து, அதற்காக மக்கள் இடையே ஊர் ஊராகச் சென்று தேவதாசி ஒழிப்பு, பால்ய விவாகம் தடுப்பு, விதவா விவாகம் அனுமதிப்பு என்பவைகளைப் பற்றி முத்துலட்சுமி விளக்கிப் பேசி வந்தார்.

தேவதாசி ஒழிப்பு, பால்ய விவாகம் தடுப்பு என்பது குறித்துப் பேசி வந்த டாக்டர் முத்துலட்சுமியின் தொண்டு பெண்கள் இடையே ஒரு பெரும் விழிப்புணர்ச்சியை உருவாக்கிற்று. பெண்ணினத்திடையே அவருக்குத் தனியொரு மரியாதையும் மதிப்பும் நாளாகவாக உருவாயிற்று.

தனது தொண்டால் பெண்ணினம் விழிப்புற்ற பிறகு, அதை அரசுக்கும் அறிவித்துச் சட்டம் இயற்றச் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்த முத்துலட்சுமி, அதற்கான

சமயம் நேரும்போது எல்லாம், பெண்ணினத்தை அவமானப்படுத்தும் இந்தச் சீரழிவுகளை அரகக்கும் அவ்வப்போது சுட்டிக்காட்டி அவர் அறிக்கைகள் மூலமாகத் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

டாக்டர் முத்துலட்சுமியின் இந்த தேவதாசி முறை ஒழிப்பையும், குழந்தை மணக் கொடுமைகளையும் பற்றி அவர் பேசிவந்த போது, சம்பந்தப்பட்டவர்கள் இடையே ஆரம்பத்தில் தொழில் ரீதியாக, பழக்க வழக்கம் சார்பாக எதிர்ப்புக் கிளம்பினாலும் கூட போகப்போக, அம்மையார் செயலில் ஓர் உண்மை உள்ளது என்பதை அறிந்த மக்கள், நாளடைவில் அம்மையார் பணியை ஓர் இயக்கமாக உருவாக்கி, அவருக்குரிய துணையாக நின்று குரல் எழுப்பினார்கள்.

அப்போது, 1927-ம் ஆண்டின்போது, காந்தியடிகள் தமிழகச் சுற்றுப் பயணம் வந்தார். காந்தியடிகளை அம்மையார் சென்று கண்டார். தேவதாசி ஒழிப்பு, பால்ய விவாகக் கொடுமைகளைப் பற்றி அவரிடம் கூறி அவற்றுக்கு ஆதரவு காட்டுமாறு டாக்டர் முத்துலட்சுமி வேண்டுகோள் விடுத்தார்.

காந்தியடிகளுடன் வந்திருந்த அவருடைய மனைவி கஸ்தூரிபா காந்தியும், முத்துலட்சுமி கூறிய உண்மைகளை ஆதரித்து அவசியம் இவை ஒழிக்கப்பட வேண்டிய சமுதாய அவமானங்கள் என்று அவர் தெரிவித்தார்.

காந்தியடிகளும், கஸ்தூரிபா காந்தியும் டாக்டர் முத்துலட்சுமியின் சீர்திருத்த உரிமைகளுக்கு ஆதரவு தந்ததோடு நில்லாமல், அவர்கள் சுற்றுப் பயணக் கூட்டங்களிலே எல்லாம் அம்மையார் சீர்திருத்தத் தொண்டுகளைப் போற்றியும், புகழ்ந்தும், பொதுமக்கள் இந்த உரிமைகளுக்கு பேராதரவு தர வேண்டுமென்று கணவனும், மனைவியும் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

இந்திய நாடு புகழ் பெற வேண்டுமானால், டாக்டர் முத்துலட்சுமி செய்துவரும் இயக்கம் பெண்ணுரிமைப் போராட்டம் வெற்றி பெறவேண்டும்" என்று காந்தியடிகள் தொடர்ந்து தனது 'யங் இந்தியா" என்ற பத்திரிகையிலும் எழுதி ஆதரவு தந்தார்.

தேவதாசி முறை ஒழிப்பு இயக்கம் வெற்றி பெற நீதிக்கட்சித் தலைவராகவும் முதல்வராகவும் இருந்த பனகல் அரசர், எம். கிருஷ்ணன் நாயர், பெரியார் ஈ.வெ. ராமசாமி, இராமாமிர்தத்தம்மையார், டாக்டர் சி. நடேச முதலியார், திரு. வி. கலியாண சுந்தரம் போன்ற பலர் அவரவர் கட்சிகள் சார்பாக டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் பெண்ணுரிமைப் போராட்டத்தை ஆதரித்துப் பேசியும், எழுதியும் வந்தார்கள்.

இந்த சீர்திருத்த எண்ணமுடையவர்களது பேச்சும், எழுத்தும், செயலும், இவர்களைப் போன்ற வேறு பலரும் பொதுமக்களது ஆதரவும், டாக்டர் முத்துலட்சுமியின் பெண்ணுரிமைச் சக்திகளுக்கும், அம்மையார் தனது செயல்களில் மென்மேலும் உறுதியோடு பணியாற்றிட ஊன்று கோலாயின.

இதற்கிடையில், டில்லி பாராளுமன்றத் தேர்தல் வந்தது. பலர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்கள்; 1926-ம் ஆண்டில், பெண்களும் வேட்பாளராகப் போட்டியிடலாம் என்று சட்டம் இயற்றப்பட்டிருந்ததால், சென்னை, வங்காளம், ஐக்கிய மாநிலங்களில் பெண்கள் பலர் தேர்தல் களத்தில் போட்டியிட்டார்கள்.

தமிழகக் கவர்னரைச் சந்தித்த சென்னை பெண்கள் கழகம், டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரைச் சென்னை சட்டமன்றத்தின் உறுப்பினராக நியமிக்க வேண்டும் என்று மனுகொடுத்துக் கொண்டது. இது சம்பந்தமாக ஒரு குழு கவர்னரைச் சந்தித்தது.

பெண்கள் கழகம் கொடுத்த வேண்டுகோள் மனுவை யும், தூதுக்குழுவினர் அம்மையாரை ஏன் சட்டமன்ற உறுப்பினராக்க வேண்டுமென்று விளக்கி கேட்டு கொண்ட காரணங்களையும் சீர்தூக்கிப் பார்த்த கவர்னர், டாக்டர் முத்துலட்சுமியை சட்டமன்ற உறுப்பினராக நியமித்தார்.

இந்த வெற்றி பெண்ணினத்தின் வெற்றியாகவே எண்ணப்பட்டது. இந்த செயலைப் பார்க்கும்போது, சென்னை மாநிலச் சட்டமன்றம்தான் மற்ற மாநிலச் சட்ட மன்றங்களுக்கும் வழிகாட்டிபோல, முதன் முதலாக, பெண்களுக்கும் வாக்குரிமை உண்டு என்றும், முதன் முதல் ஒரு பெண் சட்டமன்றத்தில் உறுப்பினராக்கப்பட்ட தும் ஓர் எடுத்துக்காட்டாக, முன்னுதாரணமாக அமைந் தது என்பது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரை, சட்டமன்ற உறுப்பினராகக் கவர்னர் நியமித்ததை, எல்லாப் பத்திரிகை களும் பாராட்டின. கவர்னரையும், அப்போதைய அரசை யும் புகழ்ந்து அவை தலையங்கங்களே எழுதின.

சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்வு பெற்ற அம்மையார், எந்தவிதப் போட்டியுமின்றி, ஒரு மனதாக, மேலவை உதவித் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார்.

முதன் முதலாக ஒரு பெண், சட்டமன்ற உதவித் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டதை ஆதரித்துப் பாராட்டி, இந்தியப் பத்திரிகைகள் எல்லாம் அம்மையாரது படத்தை வெளியிட்டுப் பாராட்டிப் புகழ்ந்து எழுதின.

சென்னை சட்டமன்ற மேலவையில் தனது கன்னிப் பேச்சில் டாக்டர் அம்மையார் பேசும்போது :

'பெண்களும், ஆண்களும் சரி நிகர் சமானமாக வாழ வேண்டும் என்று பாரதியார் பாடியுள்ளார். நாட்டு

முன்னேற்றத்திற்காக நற்பணி செய்திட பெண்களும் பெரும்பான்மையாக அனுமதிக்கப்பட வேண்டும்.

அவ்வையார், காக்கை பாடினியார், வெண்ணிக் குயத்தியார், ஆதிமந்தியார், போன்ற சங்க காலப் பெண்கள் பாவரசிகளாக நடமாடினார். அன்றைய அரசவையிலும் இடம் பெற்று, அவ்வப்போது நல்லுரைகளைக்கூறி அவர்கள் நாட்டில் அமைதி நிலவச் செய்தார்கள்.

அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்ற அவ்வை, போர் நிலை நீக்கி, அமைதி உண்டாக்கினார் என்று புறநானூற்றில் இருக்கிறது. ஆனால், பெண்களின் நிலை இடைக்காலத்தில் மிகவும் தாழ்ந்து போய்விட்டது. அதனால், உலகப் பார்வையில் இந்தியப் பெண்களின் நிலை இழிவாக உள்ளது. பெண்கள் அடிமைகளாக நடத்தப் படுகின்றனர்.

"உலக அரங்கில் இந்தியாவின் மேன்மை சிறப்பாக விளங்க வேண்டுமானால், பெண்களுக்கும் உரிமைகள் எல்லாம் வழங்கப்பட வேண்டும்." — என்று டாக்டர் முத்து லட்சுமி அம்மையார் குறிப்பிட்டார்.

வேறொரு சமயத்தில் 'தேவதாசி ஒழிப்பு முறை பற்றி சென்னை சட்ட மன்ற மேலவையில் நடந்த ஒரு சூடான விவாதத்தின் போது, டாக்டர் முத்துலட்சுமி அம்மையாருடன் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் ஒன்றாகப் படித்த நாவலர் சத்தியமூர்த்தி என்ற காங்கிரஸ்காரருக்கும் அம்மையாருக்கும் நிகழ்ந்த சொற்போரில் "தேவதாசி முறை நீடிக்க வேண்டும்" என்று சத்தியமூர்த்தி ஐயர் வாதாடினார். 'அது பெருமை மிக்க ஒரு பணி" என்றார்.

உடனே அம்மையார் அந்த விவாதத்தின்போது குறுக்கிட்டு, "அப்படியானால், அந்தப் பணிக்குத் தங்கள் மகளை அனுப்புவீர்களா?" என்று நெருப்பாகக் கொட்டினார் வார்த்தைகளை. நாவலர் ஐயர் வாயடங்கிப் போனார்!

தமிழ் நாட்டு மருத்துவமனைகளில் அம்மையார் செயல்களால் பல சீர்திருத்தங்கள் உருவாகின. அவற்றில் ஒன்று; பெண் மருத்துவர்கள் பெண் நோயாளிகளைப் பார்க்க, சிகிச்சை புரிய நியமிக்கப்பட்ட சீர்திருத்தமாகும்.

தமிழ்நாட்டு சுகாதார நிலையங்களில், பெண் உறுப்பினர்களை நியமிக்கப் பாடுபட்டார். அவரது நடவடிக்கைகளால் பெண் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

உயர்நிலைப் பள்ளிகளில் மருத்துவச் சோதனை முறைகளை, மாணவ, மாணவிகளுக்குச் செய்ய வேண்டும் என்பதைச் செயல் முறைக்குக் கொண்டு வந்தது அம்மையாரே ஆவார்.

இவை அனைத்துக்கும் மேலாக, தனது ஜீவ நாடிக் கொள்கையான தேவதாசி அமைப்பு முறையை அடியோடு ஒழிக்கப்படுவதற்கு முழு முதற்காரணமாக இருந்தவர் டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் அருந்தொண்டே ஆகும் என்றால் மிகையல்ல!

தேவதாசி முறையை அம்மையார் ஒழித்ததால், அந்த தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்களின் கதி என்ன? அவர்கள் எப்படி வாழ்க்கையை நடத்துவார்கள் என் கேள்வி எழுந்தது!

அதற்கும் டாக்டர் முத்துலட்சுமி ஒரு திட்டம் கொண்டு வந்தார் அதாவது இந்திய சேவா சமாஜத்தில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 'தேவதாசி'கள் என்பாருக்கு அந்த சமாஜம் மூலமாக நல்வாழ்வு கிடைக்க அவர் ஏற்பாடு செய்து தந்தார்.

டெல்லி பாராளுமன்றத்தில் இளமை மணம் தடுப்பு மசோதா விவாதத்திற்கு வந்தது. அதற்கு அம்மையார், நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து தக்க ஆதரவைத் திரட்டினார்.

இந்திய பெண்கள் கழகம், குழந்தை மணம் தடுப்பின் பொருட்டுச் செய்த பல போராட்டங்களால் இது தொடர்பான சட்டம் சென்னை மாநிலத்திலும் நிறைவேற்றப் பட்டதற்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியே முலமுதல் காரணமாகும். சாரதா சட்டம் என்ற சட்டமும் நிறைவேறியது.

'தொட்டிலை ஆட்டும் கை, தொல்லுலகை ஆளும் கை' என்பதற்கு ஏற்றவாறு, இதுபோன்ற அரிய செயல் முறைகளையும், அதற்கான தீவிர நடவடிக்கைகளையும் டாக்டர் அம்மையார் அயராது மேற்கொண்டார்.

இவைமட்டுமா டாக்டர் ரெட்டி செய்தார்? கொடிய நோய் நொடிகளால் குழந்தைகள் பலியாகும் கொடுமைகளை நீக்கிட, குழந்தைகளுக்காகத் தனி மருத்துவ நிலையத்தை அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, அதை அமுலுக்கும் கொண்டு வந்தார்.

அந்த தனி மருத்துவ நிலையங்களில் எல்லாம் குழந்தை வைத்தியத்தில் நிபுணர்களான மருத்துவ வல்லுநர்கள் பொறுப்பேற்றிடக் காரணமாக இருந்தார்.

இன்றைக்கு காமராஜர் ஆட்சியும், திராவிட இயக்க ஆட்சிகளும் கல்விக்குக் கொண்டு வந்திருக்கும் சலுகைகளுக்கு முன்னோடியாக, பொருளாதாரத் துறையிலே பின்தங்கிய பெற்றோர்கள், தமது குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாத நிலையில் இருப்பதை அம்மையார் உணர்ந்து, சட்டமன்றத்தில் ஏழை பெண்களுக்கான கல்விக்கு அரசு உதவி செய்யவேண்டும் என்றும் பேசினார்.

கல்வியின் பொருட்டு அந்த ஏழை பெற்றோர்கள் கல்விக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டாம் என்ற நிலைக்கு அரசாங்கத்தை அவர் உடன்படச் செய்தார்!

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் இந்த கல்விக் கட்டணம் ரத்து அதாவது இலவசக் கல்வியளிப்பு காமராஜர் ஆட்சியிலும், திராவிடர் இயக்க ஆட்சியிலும் தொடர்ந்து படிப்படியாக ப்ளஸ்-டூ வரை, ஆண் பெண் இலவசக் கல்வி வந்துள்ளது என்பதை எண்ணும்போது, அன்று அந்த அம்மையார் முத்துலட்சுமி உழைத்த உழைப்பு எதிர்காலத்தில் எந்த அளவுக்கு முன்னேற்றத்தை மக்களுக்கு வழங்கி இருக்கிறது பார்த்தீர்களா? இதல்லவா பொதுத்தொண்டின் இலக்கணம்.

சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் இருந்த திருமதி முத்துலட்சுமி அம்மையாரி தொண்டுகள், அரசியல் கட்சிகள் சாரா சேவைகள், நாட்டுக்கும். மக்களுக்கும் குறிப்பிட்டுக் கூறுவதானால், ஏழை எளிய அடிமட்டத்தவர்க்கும், பெண்களுக்கும் எவ்வளவு சிறப்பாக, முக்கியமானவைகளாக இருக்கின்றன என்பவற்றை நாம் இன்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய சம்பவங்களாக அமைந்துவிட்டன.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, இலங்கை அரசு அழைப்பின் பேரில் 1929-ம்ஆண்டு சென்று, அங்கே, பௌத்தர், இஸ்லாமியர், தமிழர் மகளிர் மன்றங்கள் ஆகியவைவற்றிலே கலந்து கொண்டு நற்புகழ் பெற்றார்.

டாக்டர் அம்மையாரது பேச்சுக்கள், செயல்கள், நடவடிக்கைகள், சிந்தனைகள், திட்டங்கள் எல்லாமே, பெண்ணுரிமை, பெண் பாதுகாப்பு, தொழிலாளர் நலன் போன்றன பற்றியதாகவே அமைந்தன, வெற்றிபெற்றன என்றால், இது மிகையல்ல!

## 8. அம்மையார் நிறுவிய அவ்வை இல்லம்!

டாக்டர் முத்து லட்சுமி ரெட்டியிடம் எந்த அளவுக்கு சமூக லட்சியங்கள், பெண்ணுரிமைப் போராட்ட உணர்வுகள், அவற்றை நிறைவேற்றும் மனோதிட உறுதிகள், சபதத்தை நிறைவேற்றிடும் வைராக்கியங்கள் இருந்தனவோ, அந்த அளவுக்கு மக்களிடம், பெண்களிடம், சிறு குழந்தைகளிடம், ஊனமுற்றோர்களிடம், ஏழை, எளிய நலிவாளர்களிடம் இரக்கம், கருணை, தயை, தாட்சண்யம், உதவிபுரியும் மனப்பான்மைகள், ஆபத்துக்கு உதவும் மனோ உறுதிகள் அத்தனையும் ஓர் ஆண் மகனுக்கும் மீறிய அளவில் இருந்தன.

வாடிய பயிருக்கும் வாடுகின்ற மனோபாவம், இரக்கம், அன்பு நெஞ்சம் இருந்ததால்தான், பொது மக்களது உணர்வுகளை அவரிபால் ஈர்க்க முடிந்தது. பிறர் துன்புற்றால் தான் வேதனைப்படும் உள்ளம் கொண்டவர்; பிறர் அழுதால் அவரது இதயம் நெகிழும் தன்மை உடையவராக இருந்தார்.

டாக்டர் முத்துலட்சுமிக்குத் தனது நான்கு உடன் பிறப்புக்கள் இறந்து விட்டனர் என்பதைப் பெற்றோர் மூலம் உணர்ந்தும், தாயை இழந்தும், தங்கையைப் பறி கொடுத்தும் தம்பியின் தாளமுடியா மரணத்தைக்கேட்டும், புகழுக்குரிய தந்தை இறந்தும்கூட, அத்தனை சோகங்களுக்கும் அவர் ஈடுகொடுத்து எதையும் தாங்கும் இதயம் பெற்றவராக இருந்து, செயற்கரிய செயல்களை எல்லாம் செய்து வெற்றி பெற்றார் என்றால், அந்த அளவு அவரிடம் இரக்க பாவமும் இருந்தது என்பதற்கு என்ன அடையாளம் தெரியுமா?

முத்துலட்சுமி இண்டர் மீடியட் படிப்பு படித்துக் கொண்டிருந்தபோது, தன் வீட்டு வேலைக்காரியின் குழந்தைக்கு வந்த நோய் நீங்கும் பனிரெண்டு மணி நேரம் வரை உண்ணாமல், உறங்காமல், அக்குழந்தையின் நலம் வளர வளர அருகிலேயே காத்திருந்து அது நலம் பெற்றபிறகு அம்மையார் நீராடி, உண்டு, உறங்கினார் என்றால், இந்த அன்பு இரக்கத்தின் நெஞ்ச அளவுக்கு எதை ஈடாகக் கூறுவது?

அதனால் தானே வள்ளுவப் பெருமான் கூட அடைக்குந்தாழ் உண்டோ அன்புக்கு? என்ற கேள்வியைக் கேட்டு, புண்கள் நீர் பூசறும் என்ற பதிலையும் கூறினார்!

எனவே, டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரிடம் அமைந்திருந்த பண்புகளான இரக்கம், கருணை, மனிதாபிமானம், மனச்சாட்சி, அன்பிரக்கம், நெஞ்சுறுதி, எடுத்த காரியத்தின் சாதனைகள் பரபரப்புடன் கூடிய சுறுசுறுப்பு ஆகியவை பிறவியிலேயே அமைந்துவிட்ட இயற்கைச் சுபாவங்களாக இருந்தன.

இல்லையென்றால், அவர் சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் ஒரே ஒரு பெண் ஹவுஸ் சர்ஜனாக முதன் முதல் பணியாற்ற முற்பட்டபோது, குழந்தைகளுக்கான வார்டைக் கொடுங்கள் என்று கேட்டுப் பெற்றிருப்பாரா? சிந்தித்துப் பாருங்கள்! அதன் அன்பின் சுரப்பு புரியும்!

சென்னையிலே உள்ள டாக்டர் வரதப்பநாயுடு நடத்தி வந்த அநாதைக் குழந்தைகளின் இல்லம் சென்று அவர்களுக்குரிய உணவு, உடை போன்ற வசதிகளைச் செய்து கொடுத்து-தக்கவர்களிடம் நிதியும் திரட்டி வழங்குவாரா?

அவரின் இந்த எண்ணங்களின் தொகுப்பு என்ன தெரியுமா? சென்னையிலே ஒரு குழந்தைகள் பராமரிப்பு

இல்லம் நடத்திட ஆசைப்பட்டார். இவருடைய இந்த சிந்தனைக்கு உறுதுணையாக நின்றவர் திருமதி மார்கரெட் கசின்ஸ் என்ற அயர்லாந்து நாட்டுப் பெண்ணாகும்.

எனவே, டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் சென்னை கீழ்ப்பாக்கத்தில் ரிட்ரேட் என்ற கட்டடத்தில் இளம் பெண்களுக்கான பாதுகாப்பு அனாதை இல்லம் ஒன்றைத் தொடங்கினார். இந்த இல்லம், வளர்ச்சிக்கு சென்னை அரசும் ஒரு சிறு தொகை உதவி செய்தது. பல செல்வந்தர்களைப் பார்த்து அம்மையார் நிதியும் திரட்டி நடத்தினார்.

டாக்டர் அம்மையாரின் தங்கை நல்லமுத்து அம்மாள், தனது மேனாட்டுப் படிப்பை முடித்து விட்டு சென்னை வந்து லேடி வில்லிங்டன் கல்லூரியிலே உளவியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அந்தக் கல்லூரியில் சேர்ந்த இரண்டு பெண்களுக்கு விடுதியில் இடமளிக்கக் கல்லூரி அதிகாரிகள் மறுத்து விட்டார்கள். இதனால் மனம் கலங்கிய நல்லமுத்து பேராசிரியர், சகோதரி முத்துலட்சுமியிடம் அந்தப் பெண்களைத் தமது வீட்டிலேயே தங்கி படிக்க வைக்கலாம் என்று கூறி, அதற்குத் தமக்கையை சம்மதிக்கச் செய்தார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் அப்போது சென்னையில் சாந்தோம் சாலை, 28ம் எண்ணுள்ள இல்லத்தில் வசித்து வந்தார். அந்த இல்லத்திலேயே இரு பெண்களும் தங்கிப் படிக்க முத்துலட்சுமி அம்மையார் ஏற்பாடு செய்தார்.

இந்த ஆரம்பம்தான், அந்த இல்லம் 1940ம் ஆண்டில் அவ்வை இல்லமாக மலர்ந்தது. இன்றும் அவ்வை ஹோம் என்றால் சென்னையில் அதற்கு ஒரு தனி மரியாதை உண்டு அல்லவா? அந்த இல்லத்தின் சாதனை

ராகத் திருமதி நல்லமுத்து ராமமூர்த்தியே பொறுப் பேற்றார்.

தேசவிடுதலைப் போராட்டத்தின்போது மகாத்மா காந்தியடிகளை ஆங்கிலேயர் ஆட்சி கைது செய்தது. அதைக் கண்டித்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தனது சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்தார்.

ரெட்டி இவ்வாறு பதவி துறந்ததை, பத்திரிகைகள் எல்லாம் பலமாகப் பாராட்டி எழுதின! அவரது தியாக உணர்வை அன்று நாடே மதித்து மகிழ்ந்தது.

டாக்டர் முத்துலட்சுமியால் துவக்கப்பட்ட அவ்வை இல்லத்தில் சாதி, மதம் பேதம் எதுவும் இல்லாமல், எல்லா நிலையிலும் ஆதரவற்ற பெண்களுக்கு இடமளிக்கப் பட்டதை எல்லா சமூக முக்கியஸ்தர்களும் பாராட்டி னார்கள்.

சென்னை சாந்தோம் சாலையிலே துவக்கப்பட்ட, அவ்வை இல்லம், 1936-ம் ஆண்டில் சென்னை அடையாறு பகுதிக்கு மாற்றப்பட்டது. அப்போது, டாக்டர் சுந்தர ரெட்டியார், அவ்வை இல்லம் சிறப்பாக வளர்வதற்கான நிதி சேர்க்கும் பணியிலே ஈடுபட்டார்.

இவருக்கு உதவியாக, டி.வி. ராமமூர்த்தி தொண்டும் மகத்தானதாக இருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அந்த இல்லத்துக்குரிய நிதியைச் சேர்த்து, அவ்வை இல்லத்தை அவர்கள் மேம்படுத்தி வளர்க்கலா னார்கள். அதற்கென கட்டடமும் கட்டிட பெருமுயற்சி எடுத்து முடித்தார்கள்.

அவ்வை இல்லத்தை, டாக்டர் முத்துலட்சுமியின் மருமகளான மந்தா கிருஷ்ணமூர்த்தி, மிக சடும் எடுப்பு

மான சிறப்பான வளர்ச்சியில் எல்லாரும் மதிக்கத்தக்க வகையிலே விரிவுபடுத்தி வளர்த்து வந்துள்ளார்.

இன்று அவ்வை இல்லம் என்றாலே அதற்கென ஒரு தனிமரியாதை, மதிப்பு எல்லா சார்புகளிலும் இருக்கிறது என்றால், அதற்கு அடிப்படைக் காரணம் மந்தா கிருஷ்ண மூர்த்தியின் அரிய உழைப்பும், ஆற்றலும்தான்.

மந்தா கிருஷ்ணமூர்த்தி அவ்வை இல்லப் பொறுப்பாளர் ஆனபின்பு, அவ்வை இல்லத்தில் ஆரம்பப்பாடசாலை, உயர்நிலைப் பள்ளி, ஆசிரியர் பயிற்சி வகுப்பு, மதிய உணவுத் திட்டம், பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள், சிறுதொழில் நிறுவனங்கள் எல்லாம் தொடங்கப்பட்டு ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி விட்டது அவ்வை இல்லம் அமைப்பு.

அவ்வை இல்லத்துப் பெண்கள், மருத்துவமனைகளில் நர்சுகளாகவும், சுகாதார மேற்பார்வையாளராகவும், கிராம சேவகிகளாகவும், சுகாதார செவிலியராகவும், பெண்கள் நலத் தொண்டர்களாகவும் உருவாக்கப்பட்டு வருகிறார்கள்.

அவ்வை ஆசிரமத்திலேயே படித்துப் பணிபுரியும் பெண்களில் யார் திருமணம் புரிந்து இல்லறம் நடத்த விரும்புகிறார்களோ, அவர்களை இந்த இல்லம் அனுமதிக்கின்றது; திருமணம் செய்து வாழவைத்து வருகின்றது.

எப்போதும் சுறுசுறுப்பும், சிந்தனையோடும், அவ்வை இல்ல முன்னேற்றத் திட்டங்களோடும் கடுமையாக உழைத்து வரும் மந்தா கிருஷ்ணமூர்த்தி, வறுமைக் கொடுமைகளால் வேதனைப்படும் குழந்தைகளையும், ஆதரவற்ற பெண்களைப் போற்றிப் பாதுகாப்பதும், அவர்களுக்கு நல்ல அறிவுரைகளைக் கூறி விழிப்புணர்வு

வாழ்வை உருவாக்குவதுமாக இல்லத்தில் விளங்கி வருகின்றார்.

மந்தா கிருஷ்ணமூர்த்தி ஒரு பி.ஏ. பட்டதாரி. முத்துலட்சுமி அம்மையாரின் இரண்டாவது மகன் கிருஷ்ணமூர்த்தியைக் கலப்பு மணம் செய்து கொண்டவர்.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்வீடன் போன்ற உலக நாடுகளுக்கெல்லாம் அவர் பயணம் சென்று அங்குள்ள அனாதை விடுதிகளின் வளர்ச்சியை, முன்னேற்றத்தை நன்கு அறிந்து வந்த ஒரு மாதரசியாவார். இவருக்கு சந்திரலேகா, சுந்தரம் என்ற இரு மக்கட் செல்வங்கள் இருக்கின்றன.

அவ்வை ஹோம் மேலாளர் மந்தா கிருஷ்ணமூர்த்தி, கௌரவ மாஜிஸ்திரேட்டாகவும் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக, டாக்டர் முத்துலட்சுமியைப் போல பதவி வகித்தவர் என்பது குறிப்பிடக் கூடிய ஓர் அடையாளமாகும்.

## 9. முதன் முதல் புற்று நோய் ஆராய்ச்சி கழகம் நிறுவியவர்!

சிந்தனையாளர்கள் வரலாற்றிலும், அனுபவசாலிகள் வாழ்க்கையிலும் ஒவ்வொரு நல்ல சம்பவங்கள் நாட்டில் உருவாவதற்கு, ஒவ்வொரு துயர சம்பவங்களும் காரணமாக இருந்திருக்கின்றன.

டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், சென்னை நகர் அடையாறு பகுதியிலே ஒரு புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகத்தை, முதன் முதலாக நிறுவினார். இந்த கழகம்

தமிழ்நாட்டிலேயே முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட புற்றுநோய் நிறுவனமாகும்.

இந்த புற்றுநோய்க் கொடுமைக்கு ஆளானவர்கள் ஆயிரமாயிரம் பேர். அவர்கள் கிராமத்து வைத்தியனிடத்தில் சென்று, நோய் குணமாகாமல் நாட்டு வைத்தியம், காரசீலை, போன்ற மருந்து நாற்றத்துடன் மாண்டவர்களும் உண்டு.

இத்தகையவர்கள் பயன் பெற்றிடச் செய்த நல்ல செயலுக்கும் கூட, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தனது வாழ்க்கையிலேயே நெருக்கமாக அனுபவித்த கண்கண்ட துக்க காரியம்தான் காரணமாகும்.

அறிஞர் அண்ணா புற்றுநோய்க் கொடுமைகளால் மாண்டபோது, நாடு எப்படி அல்லோல கல்லோலப் பட்டதோ, அதனைப் போலத்தானே மற்ற புற்று நோயாளர்கள் இறக்கும்போதும் கூட, அவர்களது குடும்பங்கள் மீளாத சோகமும், வறுமையும் அனுபவிக்க வேண்டிய அவலநிலைகள் வரும்? அதுபோலவே, டாக்டர் முத்துலட்சுமியின் தங்கை சுந்தரம்மாள் புற்று நோயால் மாண்ட இழப்பை அவரால் தாங்க இயலாது.

அதன் எதிரொலியாக, தனது தங்கையின் மரணத்தை மனதில் எண்ணியே சென்னையிலே இந்த புற்று நோய் ஆராய்ச்சிக் கழகத்தை உருவாக்கிட அம்மையார் காரணமானார்.

டாக்டர் முத்துலட்சுமியின் தங்கை சுந்தரம்மாள் 1923-ம் ஆண்டு ஓயாத வயிற்றுக் கடுப்புக்கு ஆளானார். எத்தனையோ டாக்டர்களால் அவர் சோதனை செய்யப் பட்டார். உணவு விடுதியில் தங்கிப் படித்ததுதான்

காரணம் என்று எல்லா டாக்டர்களும் கருத்துக் கூறினார்கள்!

சுந்தரம்மாளுக்கு சிறிது உடல் நலம் சீரடைந்து வந்தது. அப்போது திருமணம் செய்து கொடுத்தாலே, மேலும் உடல்நிலை குணமாகிவிடும் என்று எண்ணினார்கள்.

திருமணமும் முடிந்தது! சுந்தரம்மாள் கர்ப்பமானார். இந்த இக்கட்டான நேரத்தில் அந்த அம்மையாருக்குப் பழைய கடுப்பு நோய் மீண்டும் புதிய வேகமாக வந்து தாக்கியது.

சென்னையிலே இருந்த எல்லா டாக்டர்களும், சில மேனாட்டு டாக்டர்களும் அவர் உடலைச் சோதனை செய்தார்கள். அவர்கள் முடிவு சுந்தரம்மாளுக்குப் புற்று நோய் என்பதுதான்.

அப்போது சென்னையில் புற்றுநோயைத் தடுக்கப் போதிய வசதிகள் இல்லை. அதனால், டாக்டர் முத்துலட்சுமி பெரும் பொருட்செலவில் கல்கத்தா நகரின் மருத்துவ சிகிச்சைக்கும், பிறகு ரேடியம் சிகிச்சைக்காக ராஞ்சி என்ற நகருக்கும் அந்த அம்மையாரை அனுப்பி வைத்தார். இறுதியாக, எந்த சிகிச்சையும் எடுபடாமல், சுந்தரம்மாள் குணமாகாமலேயே, பெரும் நோய்க் கொடுமைகளை அனுபவித்தபடியே மரணமடைந்தார்.

புற்று நோய்க் கொடுமைகளை தனது சகோதரி அனுபவித்தபோது, முத்துலட்சுமி நேரிலேயே அதன் போக்கை பார்த்து கண்ணீர்விட்டு வேதனைப்பட்டதால், நெஞ்ச உறுதியை இழந்ததால், பெரும் பொருள் செலவு செய்து துன்பங்களை ஏற்றதால், மனம் வருந்தினார் டாக்டர் அம்மையார்,

சென்னை மாநகரிலேயே புற்று நோய்க்கான தடுப்பு சிகிச்சை முறைகள் இருந்தால்; இவ்வளவு பெரும் பொருள் செலவுகளையும் தவிர்த்திருக்கலாமே, தங்கையின் உயிரையும் காப்பாற்றி இருக்கலாமே என்று மனம் உளைந்தார்! நொந்தார்!

அதனால், புற்று நோய் வந்தவர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்தில், சென்னையிலேயே ஒரு புற்று நோய் ஆராய்ச்சிக் கழகத்தை நிறுவுவது என்ற முடிவுக்கு டாக்டர் அம்மையார் வந்தார்.

அதற்கான ஆக்கப் பணிகளில் ஈடுபட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, தனது எல்லா வகை செல்வாக்குகளையும் பயன்படுத்தி, தீவிரமாகச் செயல்பட்டார்.

பட்டப்படிப்புக்காக முன்பு அவர் லண்டன் மாநகர் சென்றார் அல்லவா? அப்போது டாக்டர் ரெட்டி, பெண்கள்-குழந்தைகள் நோய்கள் பற்றி மட்டும் ஆராய்ந்ததோடு நின்றுவிடவில்லை.

அங்கே புகழ் பெற்றிருந்த ராயல் புற்று நோய் மருத்துவமனையில், சர் ஏர்னெஸ்ட் மைலிஸ் என்பவரின் உதவியோடு புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சியையும் டாக்டரம்மா செய்தார்.

சென்னைக்குத் திரும்பியதும், புற்று நோய் ஆராய்ச்சி கழகம் ஒன்றை எப்படியும் துவங்குவது என்று தீவிரமாகச் செயல்பட்டதுடன் நில்லாமல், பல செல்வந்தர்களையும் தேடிச் சென்று அவர் தனது எண்ணத்தைத் தெரிவித்தார். அவர்களும் அதற்கான உதவிகளைச் செய்யத் தயார் என்றார்கள்.

சென்னை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழா 1935-ம் ஆண்டு நடைபெற்றபோது, இந்தியப் பெண்கள்

கழகத்தைச் சேர்ந்த ஆறுபேரின் கையெழுத்துக்களோடு கூடிய தீர்மானம் ஒன்றை ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் நினைவு விழா நிதிக்குழுவிடம் அளித்தார்கள்.

சென்னையில் புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் அமைந்திட, ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் நினைவு நிதியிலே இருந்து ஒரு கணிசமான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று, மேலும் பத்துப் பன்னிரெண்டு பெண்கள் கழகங்கள் அதே மன்னர் நிதிக்குழுவுக்கு விண்ணப்பித்தன.

சென்னை மருத்துவமனைகளில் ஆயிரக்கணக்கான புற்று நோயாளிகள் அவதியுறுவதைச் சுட்டிக்காட்டியும், புற்று நோய்க்கென ஒரு தனி ஆராய்ச்சிக் கழகம், மருத்துவமனை அமைய வேண்டியதின் முக்கியத்துவத்தை 1946-ம் ஆண்டு ஜோசப் என்ற அரசு பொது மருத்துவ அதிகாரி கருத்தறிவித்தார்.

அந்த நேரத்தில் அரசு பொது மருத்துவமனையின் மருத்துவ அதிகாரியாக இருந்தவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் இரண்டாவது மகனான கிருஷ்ணமூர்த்தி. அவர் இந்த புற்று நோய் அறிக்கையைப் படித்துப் பார்த்து அதன்மீது அரசுக்குத் தனது பரிந்துரையைச் செய்தார்.

பொதுக்கூட்டங்கள், அறிக்கைகள், தூதுகுழுக்கள், மனுக்கள் மூலமாக புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் பற்றிய கருத்துக்களை அரசுக்கு அம்மையாரால் அறிவிக்கப் பட்டன.

பற்பல புற்று நோய்க் கண்காட்சிகளும், பொது மக்களுக்குக் காட்டப்பட்டன. இதைத் தொடர்ந்து இந்திய பெண்கள் கழகம் புற்று நோய் நிதியை திரட்டியது.

இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த பாபு ராஜேந்திர பிரசாத் 1951-ம் ஆண்டு ஏப்ரல் 8-ம் நாளன்று புற்று நோய் ஒழிப்பு நாளைத் தொடங்கி வைத்தார்.

இந்தியப் பிரதமராக இருந்த பண்டித நேரு 1952-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் புற்று நோய் கழகத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்தக் கழகத்திற்கு இந்திய அரசு ஓர் இலட்சம் ரூபாயும். நல்வாழ்வு அமைச்சகம் இரண்டு லட்ச ரூபாயும் மானியம் அளித்தன.

டாக்டர் முத்துலட்சுமியின் பெரும் முயற்சியால், இவ்வாறு சென்னையில் புற்று நோய் ஆராய்ச்சிக் கழகம் உருவாகி, இந்தியாவிலேயே சிறந்தது என்கின்ற தகுதியெலாம் பெற்று வளர்ந்தது.

இந்த ஆராய்ச்சிக் கழகத்திலே செய்யப்படுகின்ற ஆராய்ச்சிகள். உலக மருத்துவ மேதைகளின் கவனத்தையும், பாராட்டுதலையும் பெற்று வருகின்றது.

டாக்டர் முத்துலட்சுமியின் இளைய மகன் எஸ். கிருஷ்ணமூர்த்தி இந்தப் புற்று நோய் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமைப் பொறுப்பு ஏற்று அன்று முதல் இன்று வரை நடத்தி வருகிறார்.

இப்போது இந்தப் புற்று நோய் ஆராய்ச்சிக் கழகம், தேசிய புற்று நோய் ஆராய்ச்சிக் கழகமாக மாறி, பொது மக்களது புற்று நோயைத் தடுக்கும் கழகமாகி விட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்

இந்த ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராக இருக்கும் கிருஷ்ணமூர்த்தி, சென்னையில் மருத்துவப் பட்டம் பெற்றவர். லண்டன், பாரிஸ், அமெரிக்க ஐக்கிய நாடு

கள், ஸ்வீடன் நாடுகளுக்கு எல்லாம் சென்று, தலைசிறந்த மருத்துவர்கள் கீழ் எல்லாம் பணியாற்றிப் புற்று நோய் மருத்துவத்தில் நல்ல அனுபவம் பெற்ற வல்லுநராகவும் திகழ்ந்துள்ளார்.

தமிழக முதல்வராக இருந்த அறிஞர் அண்ணா, 1969-ம் ஆண்டில், இந்தப் புற்று நோய்க் கொடுமைகளுக்கு ஆளானபோது, இந்த மருத்துவமனை நிபுணர்கள் மிக அக்கறையுடன் எடுத்துக்கொண்ட கஷ்ட, நஷ்டங்கள் சொல்ல இயலாதது ஆகும்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், இந்தப் புற்று நோய் ஆராய்ச்சிக் கழகம் முதன் முதலாகச் சென்னையில் அமைந்திட அவர் ஆற்றிய அரிய பணிகள் ஏராளம் என்றால் அது மிகையாகா.

## 10. பெண்ணுரிமைக்குப் போராடிய வீராங்கனை காலமானார்!

○ பெண்ணுரிமைகளுக்காகப் போராடிய வீராங்கனை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி புதுக்கோட்டையில் முதன் முதல் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் பெண் என்ற பெயர் பெற்றார்!

○ மருத்துவத்துறைக் கல்வியில் எம்.பி.சி.எம். என்கிற பட்டத்தை முதன் முதல் பெற்ற பெண் என்ற புகழை நிலைநாட்டினார்!

○ இந்திய அரசின் உதவித் தொகையைப் பெற்றுப் பிரிட்டனுக்குச் சென்று, பெண்கள்-குமரிகைகளின் நோய்

பற்றி ஆராய்ச்சி செய்த முதல் பெண் என்ற பெருமையை அடைந்தார்.

○ தமிழக சட்டமன்றத்தில் துணைத் தலைவர் என்ற பதவியை எதிர்ப்பில்லாமல் ஒரு மனதாகத் . தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணியாக விளங்கினார்!

○ அன்னிபெசண்ட் அம்மையார், திருமதி மார்கரெட் கசின்ஸ் ஆகியவர்களுடன் இணைந்து இந்திய மகளிர் மன்றம் என்ற அமைப்பை பெண்ணுரிமைகளுக்காகப் போராடத் துவங்கியவர் என்ற சிறப்பினைப் பெற்றார்!

○ நாம் இந்தியாவின் குழந்தை என்ற உணர்வு ஒவ்வொரு பெண்ணுக்கும் உண்டாக வேண்டும் என்ற உணர்வுக்காகப் போராடினார்!

○ ஒவ்வொரு ஆணும்-பெண்ணும் கல்வி கற்பதன் அவசியம் கட்டாயமாக்கப்பட ஏற்பட வேண்டும் என்ற லட்சியத்தை நாட்டில் உருவாக்கினார்!

○ பால்ய விவாகம் என்ற குழந்தை மணத்தை, சமூகப் பேய்கள் என்ற கொடுமைகள் என்பதாக, அறிவித்து, அந்த மணத்தை அறவே ஒழித்தார்!

○ நகராட்சி, சட்டசபை, சட்டமன்ற மேல்சபை ஆகியவைகளில் ஆண்களைப் போல பெண்களும் இடம் பெற வகை செய்ய வேண்டும் என்பதற்கு அடையாளமாக அவற்றில் உறுப்பினராகிப் பணியாற்றினார்.

நகராட்சி, வட்டாட்சியர் அலுவலகங்கள், சட்டசபை, மேல் சபைகளில் பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதோடு, அவர்களுடைய கருத்துக்களும் ஏற்கப்பட வேண்

டும் என்ற உரிமைக் கிளர்ச்சிகளுக்காகப் போராடிச் செயல் படுத்தினார்!

ஒவ்வொரு பெண்ணையும், சகோதரியாகவும், தாயாக வும் கருதி, அவர்களுக்கு வருங்கால இந்தியாவில் வாழ் வாங்கு வாழ வகை செய்து கைதூக்கி விட வேண்டும் என்பதற்காகப் போராடினார்.

○ பெண்களைப் பல குழுக்களாகப் பிரித்துக் கல்வி முதலான பல துறைகளிலும் அவர்கள் முன்னேறுவதற் கான முயற்சிகள் செய்யப்படுவதில் எவ்விதத் தடைகளும் இருக்கக்கூடாது என்பதற்காக அரும்பாடு பட்டார்!

○ நாட்டில் தேவதாசி முறைகள் இருக்கக் கூடாது, பெண்கள் தன்மானத்துடனும், ஒழுக்கத்துடனும் வாழ்வ தற்காக தேவதாசி முறைகளை ஒழித்தார்!

○ இந்திய மகளிர் மன்றம், பெண்ணடிமை வாழ்வு, பெண்களுக்குரிய சமுதாய சம உரிமை வழங்கப்பட வாதாடினார்!

தெய்வம் உள்ளத்தில் இருப்பது என்பதால், முதலில் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திரு என்ற போதனை யைப் பெண்களுக்காகப் போதித்தார்! அதுதான் இறைவன் வழிபாடு என்று வாழ்ந்து காட்டினார்

○ பக்தி என்பது கதறுவதுமல்ல; பிச்சை எடுத்துப் பெறுவதுமல்ல: உண்மையான பக்தி என்பதன் அடை யாளமே, உளப்பூர்வமாகச் செலுத்தப்படும் இறை வணக் கம் தானே தவிர, வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளும் வீணான ஆர்ப்பாட்டமோ, அதிகார விளம்பரமோ, கோலாகலமான கொண்டாட்டமோ அல்ல என்பதைத் தனது வாழ்க்கையில் நடந்து காட்டினார்!

இந்த நேரத்தில் 1943-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் தேதியன்று அவரது கணவர் சுந்தர ரெட்டியார் நோய் வாய்ப்பட்டுக் காலமானார்.

○ அவ்வை பொதுநலப்பணி மருத்துவமனை என்ற ஒரு மருத்துவமனையைச் சென்னை அடையாறு பகுதியில் நிறுவினார்! அங்குள்ள கிராமப்புற மக்களின் நோய் தீர்க்கும் பணியைத் தொய்வின்றிச் செய்து வந்தார்.

○ கிராம மக்களின் நோய் நொடிகளைக் குணப்படுத்துவதோடு நில்லாமல், கிராம முன்னேற்றம், கிராம சுகாதாரம், தண்ணீர் வசதி, ஏழை எளிய மக்களுக்குரிய கல்வி வசதி, அவர்கள் படித்து அறிவு பெற்றிட நூலக வசதி போன்ற அனைத்தையும் செய்து கொடுக்கப் பெரிதும் உழைத்து வெற்றி கண்டார்.

○ காந்தியடிகளிடம் அம்மையாருக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, டாக்டர் ராமச்சந்திரன் என்பவர் 1946-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் காந்தி கிராமம் என்ற ஒரு கிராமம் அமையப் பரிந்துரைச் செய்து, காந்தி கிராமம் நிறுவிடச் செயல்பட்டார்.

○ காந்தியடிகள் சுதந்தரப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, அதைக் கண்டித்து, ஆங்கிலக் கவர்னரால் நியமனம் செய்யப்பட்ட தனது சட்டமன்ற மேலவை உறுப்பினர், துணைத்தலைவர் பதவிகளை ராஜிநாமா செய்தார்.

○ 'ஸ்திரி தர்மா' என்ற ஒரு பத்திரிகைத் துவங்கி ஒத்துழையாமைப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நேரத்தில் வீரம் கொப்பளிக்கும் தனது எழுத்துக்களைப் பயன்படுத்தி உரிமைப்போர் போராட்டத்திற்காகப் போராடினார்!

○ காந்தியடிகளாரின் ஒத்துழையாமை இயக்கத்தின் போது, டாக்டர் முத்துலட்சுமியின் இளைய மகன் கிருஷ்ணமூர்த்தி உட்பட 200 மாணவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைவைக்கப்பட்டதை எதிர்த்து, மாணவர்கள் படிக்கும் கல்விப் பருவத்தில் அவர்களைச் சிறையிலடைப்பது அவர்களது கல்வி வாழ்க்கையைக் கெடுத்துவிடும் என்ற காரணத்தைக் கூறித் தன்பிள்ளை பிறர் பிள்ளைகள் என்ற பேதம் பாராமல் அந்த 200 மாணவர்களையும் ஜாமீன் எடுத்து விடுவித்தார்!

○ அரிஜனங்களின் நல்வாழ்வுக்கு இந்தச் சமுதாயம் இழைக்கும் அநீதிப் போக்கைக் கண்டித்துப் போராடிய காந்தியடிகள் எர்ரவாடா சிறையில் அடைக்கப்பட்டதை எதிர்த்து, சென்னை ஸ்பர்டங் சாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தை, ஆங்கிலேயர் ஆட்சி நடத்தவிடாமல் தடைவிதித்தது. அந்தத் தடையை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மீறினார்! காந்தியடிகளது போராட்ட உணர்வுகளுக்குத் தனது ஆதரவைக் காட்டினார்!

○ தீண்டாமை ஒழிப்பின் பொருட்டு தென்னகத்தில் காந்தியடிகள் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தில், இந்திய மகளிர் மன்றச் சார்பில் சிறப்பான வரவேற்பும், பாராட்டும் வழங்கி தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை ஆதரித்தார்! காந்தியடிகளே அம்மையாரின் சேவைகளை மனம் திறந்து பாராட்டி மகிழ்ந்தார்.

○ அவ்வை இல்லம், சேவாசதனம், சாரதா வித்யாலயம் போன்ற பெண்களுக்கான நிலையங்கள் நகரத்தில் இருப்பன போல, கிராமங்களிலும் உருவாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை ஆங்கிலேயர் ஆட்சிக்கு விடுத்துக் கேட்டுக் கொண்டார்.

○ ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கும் சொத்து உரிமை அளிக்கப்படவேண்டும். இதற்குரிய சட்டத்தைக்

கொண்டு வரப்பட வேண்டும் என்ற பெண்கள் சொத்துரிமை திட்டத்தைக் காந்தியடிகளிடமே மனு கொடுத்தும், அவர் முன்பு உரையாற்றும் போதும் சுட்டிக் காட்டிக் கேட்டுக் கொண்டார்!

○ ஜாதி, மத பேதங்களை மறந்து பெண்கள் சமூக சேவையில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் ஒழியும்! அதற்கு எடுத்துக்காட்டாக என்னால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரும் அவ்வை இல்லங்கள் போல நாடெங்கும் திறக்கப்பட வேண்டும் என்று கூறினார்! அதற்காக அரும்பாடுபட்டார்!

○ வருங்காலத் தலைமுறையினர் இடையே ஒற்றுமை உணர்வை வளர்ப்பது பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் நோக்கமாக இருக்க வேண்டும். அப்போது தான் நாட்டுப்பற்று அந்த மாணவர்கள் நெஞ்சங்களில் தழைக்க வழியேற்படும் என்று ஆங்கிலேய ஆட்சியாளர் களைக் கேட்டுக் கொண்டார்.

○ இளைஞர்கள் தங்களுடைய எண்ணம், செயல், வார்த்தை ஆகியவற்றில் பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்ற தனது கருத்தையும் மாணவர் உலகு முன் வைத்தார்!

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் மேற்கண்ட கருத்துக்களை தமிழ்நாட்டில் மட்டும் கூறிக் கொண்டிருக்க வில்லை.

அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் 1933ம் ஆண்டு நடந்த பெண்கள் மாநாட்டிலும் மேற்கண்ட கருத்துக் களை 'நாகரிகம் என்ற தலைப்பில் பேசிய தனது சொற் பொழிவிலே குறிப்பிட்ட உலகப் பத்திரிகைகள் எல்லாம் அதைப் பாராட்டி எழுதின!

அமெரிக்க பத்திரிகையாளர்கள் இடையே அவர் பேசும் போது, அந்த பத்திரிகை நிருபர்கள், இந்தியாவைப் பற்றி

'மிஸ்மேயோ' தனது புத்தகத்தில் கூறியுள்ள தாறு மாறான விவரங்களை எடுத்துக்காட்டி' 'அதெல்லாம் உண்மைதானா?' என்று அம்மையாரைக் கேட்டார்கள்.

''மிஸ் மேயோவின் ' புத்தகக் குறிப்புகள் மருத்துவ மனை நோயாளிகள் பற்றிய விமர்சனம்தானே தவிர, இந்தியர்களின் வாழ்க்கைப் படப்பிடிப்பு அல்ல'' என்று சுடச்சுடப் பதில் கூறினார் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார்!

எங்கே கூறினார் தெரியுமா-இந்த பதிலை? அமெரிக்காவிலே உள்ள சிகாகோ நகரிலே! ஏன் உரைத்தார் இந்த பதிலை? இந்தியாவை இகழ்ந்தவரை எதிர்த்து! இந்தியா எனது தாய்நாடு என்ற பெருமைதேடிட! இந்த உணர்வு நமக்கும் தேவை அல்லவா? என்பதே-அந்த புகழுரையின் கரு உரு!

இத்தகைய ஒரு நுண்மாண் நுழைபுல அறிவுடைய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியாரை, 1952-ம் ஆண்டு ராஜாஜி தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைத்தபோது, மேலவை உறுப்பினராக மீண்டும் பதவி ஏற்க வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொண்டார்கள்.

அந்தப் பதவியை விட மிக முக்கியமானது புற்று நோய் மருத்துவமனைப் பணி என்று அவர் எண்ணியதால் அந்தப் பதவியை அவர் வேண்டாம் என்று நிராகரித்து விட்டார்! புற்று நோயாளர்களைக் காக்க அயராது உழைத்தார்!

சமுதாய சீர்திருத்தத்தில் மிகமிக பற்றும் அக்கறையும் கொண்ட அந்த அம்மையார், நல்லனவற்றுக்குத் தோள் கொடுத்து, சீரிய பணிகளைச் செய்து நாட்டு மக்கள் இடையே நற்பெயரைத் தேடிக் கொண்டார்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், தன்னுடைய வரலாற்றை, 'எனது சட்டமன்ற அனுபவங்கள்' என்ற பெயரில் புத்தகமாக எழுதியுள்ளார். அது நூலாகவும் வெளியிடப்பட்டது.

அமரகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பாடலுக்கு ஏற்றவாறு டாக்டர் முத்துலட்சுமி, ஒரு புதுமைப் பெண்ணாக அதற்குரிய எடுத்துக்காட்டாக, அரும் பணிகளை ஆற்றி, அயராது உழைத்து, செயற்கரிய செயல்களைச் செய்த பேரறிவாளர்களுக்கொப்ப சான்றோர்களைப் போல, நாட்டுக்கு வழிகாட்டியாக, பொது வாழ்வுக்குரிய இலக்கணமாக, குறிப்பாக கட்சி சாரா பொதுத் தொண்டுக்கு அவர் ஓர் இலக்கியமாக வாழ்ந்தவர் ஆவார்!

அத்தகைய அரும் பெரும் தேசப்பற்றுடைய, மக்கள் நல்வாழ்வுக்கு மாண்பு தேடிய, பெண்ணுரிமைகளைப் பெற்றுத்தந்த பெருமையுடைய, பெண்பாற் தொண்டர்களுக்கு எல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி என்ற வீராங்கனை, 1968-ஆம் ஆண்டு, சூலை மாதம், 22-ம் நாள், தனது எண்பத்திரண்டாம் வயதில் காலத்தோடு காலமாகி-இயற்கையிலே இணைந்துவிட்டார்!

மரணம் அவரைத் தன்மடியிலே உறங்க வைத்துக் கொண்டது! பெண்ணுலகம், அவரது செயற்கரிய செயல்களை எண்ணியெண்ணி நெஞ்சு விம்முகின்றது! பெண் உரிமைப் போராளி, கட்சி சாரா பொதுநல உழைப்பாளி டாக்டர் முத்துலட்சுமி புகழ் புற்று நோயாளர் நெஞ்சிலே வாழ்க!

முற்றும்

## எமது பிற

## நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் நூல்கள்

| | |
|---|---|
| டாக்டர் மு.வ.வின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் | |
| பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் | ,, |
| அண்ணல் மகாத்மா காந்தியின் | ,, |
| காமராஜரின் | ,, |
| வி. ராதாகிருஷ்ணனின் | ,, |
| சர் வின்ஸ்டன் சர்ச்சிலின் | ,, |
| ஸ்டாலினின் | ,, |
| டார்வினின் | ,, |
| அறிஞர் அண்ணாவின் | ,, |
| அன்னி பெசண்ட் அம்மையாரின் | ,, |
| கவிஞர் கண்ணதாசனின் | ,, |
| குன்றக்குடி அடிகளாரின் | ,, |
| பெஞ்சமின் ஃபிராங்கிளினின் | ,, |
| அன்னை தெரேசாவின் | ,, |
| நம்நாட்டுத் தலைவர்களின் | ,, |
| நாட்டுக்கு உழைத்த நல்லவர்களின் | ,, |
| இங்கர்சாலின் | ,, |
| அரிஸ்டாட்டிலின் | ,, |
| பிளாட்டோவின் | ,, |
| ரூசோவின் | ,, |
| சாக்ரடீசின் | ,, |
| ஜே. கிருஷ்ணமூர்த்தியின் | ,, |
| ரஸ்ஸலின் | ,, |
| நீட்சேயின் | ,, |
| தந்தை பெரியாரின் | ,, |
| பாரதியின் | ,, |
| கவிக்குயில் சரோஜினியின் | ,, |